வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 03 | 24.01.2022 திங்கட்கிழமை | இதழ் : 50 | பக்கங்கள் : 16




# தமிழ் கட்சிகள் கூட்டாக இந்தியாவை நாடியுள்ளமை சாதாரண விடயமல்ல!

## அரசுக்கு சு.க. எச்சரிக்கை

கொழும்பு, ஜன. 24

“அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தக் கோரியும், 1987ஆம் ஆண்டு வாக்குறுதிகளை முழுமையாக நடைமுறைப்படுத்துமாறு வலியுறுத்தியும் தமிழ் அரசியல் கட்சிகள் ஒன்றாக இந்தியாவை நாடியமை சாதாரண விடயமாகக் கருத முடியாது.”

- இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உப தலைவர் ரோஹண லக்ஸ்மன் பியதாஸ தெரிவித்தார். 15



## எரிபொருள் இல்லை இன்று முதல் மின்தடை

கொழும்பு, ஜன. 24

பல மின் உற்பத்தி நிலையங்களில் உள்ள எரிபொருள் கையிருப்பு குறைவடைந்துள்ளதால் இன்று இரவு முதல் மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படும் என்று இலங்கை மின்சார சபை பொறியியலாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

நீர் மின் உற்பத்தி நேற்று முன்தினம் மொத்த மின் தேவையில் 25 சதவீதமாக குறைந்துள்ளது. அதே நேரத்தில் நிலக்கரி, டீசல் மற்றும் உலை எண்ணெய் மூலம் மின் உற்பத்தி 72 சதவீதமாக அதி 15

## மின்சார சபைக்குள் மாபியா!

### மைத்திரிபால குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன. 24

மின்சார துறைக்குள் பல ஆண்டுகளாக மாபியா ஒன்று செயற்பட்டு வருவதாகவும் மின்சார பிரச்னை என்பது திடீரென வந்த பிரச்னையல்ல எனவும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

காலியில் நேற்று செய்தியாளர்களிடம் 15



## 105 இந்தியப் படகுகளை ஏலம் விடுவதற்கு முடிவு

கொழும்பு, ஜன. 24

கடந்த காலங்களில் இலங்கைக் கடற்பரப்பில் சட்டவிரோத ஆழ்கடல் இழுவை மீன்பிடியில் ஈடுபட்டபோது கைப்பற்றப்பட்ட சுமார் 105 இந்திய ஆழ்கடல் இழுவை படகுகளை, சட்ட நடவடிக்கைகள் முடிவடைந்த பின்னர், அடுத்த மாதம் பொது ஏலத்தில் விடுவதற்கு மீன்பிடி அமைச்சு தீர்மானத்துள்ளது.

காரைநகர் (65), காங்கேசன்துறை 15

## நாட்டின் தலைவராக ரணில்?

கொழும்பு, ஜன. 24

நாட்டின் தலைவராக ரணில் விக்ரமசிங்கவை தெரிவு செய்ய வேண்டும் என்ற யோசனை கரந்தெனிய ஐக்கிய தேசியக் கட்சியின் அதிகார சபைக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன தலைமையில் இந்த அதிகார சபைக் கூட்டம் நேற்று நடைபெற்றது.

ஐக்கிய தேசியக் கட்சியின் கரந்தெனிய அதிகார சபையின் தலைவர் நுவன் சோமரத்ன இந்த யோசனையை கொண்டு வந்ததுடன் அதிகார சபையின் குழு செயலாளர் மங்கள குமார அதனை ஆமோ 15

## 7 நாட்களில் 87 பேர் பலி!

கொழும்பு, ஜன. 24

நேற்றுமுன்தினம் வரையான ஒரு வாரத்தில் மட்டும் நாட்டில் கொரோனா தொற்றால் 5 ஆயிரத்து 391 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன், 87 மரணங்கள் நிகழ்ந்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை சுகாதார சேவைகள் திணைக்களம் நேற்று உறுதிப்படுத்தியது.

இதேவேளை, நேற்று முன்தினம் மட்டும் தொற்றால் 15 பேர் உயிரிழந்தனர். இதில், 9 ஆண்களும் 6 பெண்களும் அடங்குவர். இதனால், நாட்டில் தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 15 ஆயிரத்து 299 ஆக அதிகரித்துள்ளது. (ஐ)

## குமார வெல்கமவின் கட்சியில் சுசில், அர்ஜுன முக்கிய பதவியில்

கொழும்பு, ஜன. 24

குமாரவெல்கம தலைமையில் புதிதாக பதிவு செய்யப்பட்ட புதிய லங்கா சுதந்திரக் கட்சியில் (நவலங்கா நிதாஸ் பக்சய) முக்கிய பதவிகளில் அர்ஜுன ரணதுங்க மற்றும் சுசில் பிரேமஜயந்த ஆகியோரை நியமிப்பதற்கு பரிந்துரைகள் செய்யப்பட்டுள்ளன.

அண்மையில், 15

## புதிய அரசமைப்பு சட்டம் இந்த ஆண்டுக்குள் வரும்

கொழும்பு, ஜன. 24

நாட்டுக்கு பொறுத்தமான அரசமைப்புச் சட்டம் இந்த ஆண்டு முன்வைக்கப்படும் எனவும் இது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் சௌபாக்கிய நோக்கு கொள்கையின் ஒரு இலக்கு எனவும் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

அஸ்கிரிய மாநாயக்கர் வரகாகொட ஞான 15



## கொழும்பு துறைமுக நகரில் பனை மரம் நாட்டும் திட்டம்

கொழும்பு, ஜன. 24

கொழும்பு துறைமுக நகரில் பனை மரங்கள் நாட்டும் செயற்றிட்டம் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டமானது சீனத்தூதுவர் கீ சென் ஹொங் அண்மைய வடக்கு விஜயத்தின் பின்னர் நடைபெறுகின்றது. 15

## கைதி உயிரிழப்பு; சிறைக்காவலர்கள் மூவர் பணி நீக்கம்

கொழும்பு, ஜன. 24

கந்துருகஸ்ஆர வேலைத்தளத்தில் கைதியொருவர் உயிரிழந்த சம்பவம் தொடர்பில், உடன் அமுலுக்கு வரும் வகையில் சிறைக்காவலர்கள் மூவர் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

வேலைத்தளத்துக்குப் பொறுப்பான சிறைக்காவலர், சார்ஜன்ட் சிறைக் 15

## யாழ்ப்பாணத்தை மீண்டும் முடக்கும் அபாயம் ஏற்படலாம்!

### பூஸ்டர் தடுப்பூசி வாரம் அறிமுகம்



யாழ்ப்பாணம், ஜன. 25

“அனைத்து செயல்பாடுகளும் வழமைக்குத் திரும்பியுள்ள நிலையில் பூஸ்டர் தடுப்பூசியை பெறாதவிடத்து, மீண்டும் ஒரு முடக்க நிலையை நோக்கி செல்ல வேண்டிய அபாயம் ஏற்படும்”, என்று யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்தார்.

நேற்று யாழ் மாவட்ட செயலகத்தில் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார். 15

# புலமைப்பரிசில் பரீட்சை பற்றிய குற்றச்சாட்டுகளை விசாரியுங்கள்!

## இலங்கை ஆசிரியர் சங்கம் கோரிக்கை

**கொழும்பு, ஜன. 24**

**தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குப் பின்னர் சில மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் முன்வைத்த குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் கடுமையான விசாரணைகள் மேற்கொள்ளப்படவேண்டுமென இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.**

பரீட்சைகளின் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்துவது பரீட்சைகள் திணைக்களத்தின் பொறுப்பாகும் என கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய ஒன்றியத்தின் பிரதம செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தேர்வுகளின் போட்டித்தன்மை குறித்து கல்வி அமைச்சகம் தெளிவான முடிவை எடுக்க வேண்டும்.

ஆசிரியர்கள் தவறு செய்திருந்தால் அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுப்பதை நாங்கள் எதிர்க்கவில்லை.

நீர்கொழும்பில் க.பொ.த உயர்தரப் பரீட்சையின் போது இதேபோன்ற கவலைகள் எழுப்பப்பட்டன. விசாரணைகள் இன்னும் நடந்து வருகின்றன- என்றார். (அ)

# அரச அதிகாரிகளுக்கான தொலைபேசி கட்டணங்கள் 25 வீதத்தால் குறைப்பு!

கொழும்பு, ஜன. 24

அரசாங்கம், வரவுசெலவுத் திட்ட தீர்மானங்களை கடைப்பிடித்து இந்த மாதம் முதல் அரசுக்கு சொந்தமான நிறுவன அதிகாரிகளின் தொலைபேசி கட்டண கொடுப்பனவுகளை குறைத்துள்ளது.

அதன்படி, சபைகள் மற்றும் அரசுக்கு சொந்தமான நிறுவனங்களில் உள்ள அதிகாரிகளின் தொலைபேசி கட்டணங்கள் 25 சதவீதத்தால் குறைக்கப்பட்டுள்ளது.

ஒரு மாதத்துக்கு அதிகபட்சமாக 13,000 ரூபாவை தொலைபேசிக் கட்டண உதவித் தொகையாக பெற்ற அதிகாரி ஒருவர் புதிய முறைப்படி 9,750 ரூபாவை மாத்திரமே பெறுவார்.

தலைமைச் செயல் அதிகாரி, நிர்வாகப் பணிப்பாளர், நிர்வாகப் பணிப்பாளர், பொது மேலாளர் ஆகியோருக்கு முன்னர் 10ஆயிரம் ரூபா வழங்கப்பட்ட நிலையில், தற்போது அது, 7500 ரூபாவாக குறைக்கப்பட்டுள்ளது.

இதேபோல், தலைமை நிதி அதிகாரி, தலைமைச் செயல்பாட்டு அதிகாரிகள் முன்னர் 9ஆயிரம் ரூபாவை பெற்று வந்த நிலையில், குறைப்பின்படி 6750 ரூபாவை பெறுவார்கள். (அ)

## வவுனியா சதொசவில் பொருள்கள் தட்டுப்பாடு

கொழும்பு, ஜன. 24

வவுனியாவில் அமைந்துள்ள சதொச விற்பனை நிலையத்தில் அத்தியாவசிப் பொருட்களுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக பொதுமக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

நாடு பூராகவும் சதோச விற்பனை நிலையங்கள் ஊடாக அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்படும் என வர்த்தக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் வவுனியாவில் அமைந்துள்ள சதொச விற் பனை நிலையங்களுக்கு செல்லும் பலரும் அத்தியாவயசிப் பொருட்களை பெற முடியாது ஏமாற்றத்துடன் திரும்பி வருவதாக தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக சீனி, பால்மா மற்றும் சில அரிசி வகைகளுக்கு தட்டுப்பாடு காணப்படுவதாக மக்கள் தெரிவித்தனர். பருப்பு மற்றும் பொன்னி அரசி என்பனவே அங்கு அதிக மாக கிடைப்பதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர். (அ)

## ஊடகவியலாளர் சுகிர்தராஜனின் 16ஆவது நினைவு நிகழ்வு இன்று

திருமலை, ஜன. 24

கடந்த 2006ஆம் ஆண்டு திருமலையில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் எஸ்.சுகிர்தராஜனின் 16ஆவது ஞாபகார்த்த தின நிகழ்வு இன்று இடம்பெறவுள்ளது.

அதன்படி, மட்டக்களப்பு காந்தி பூங்கா முன்றலில் அமைந்துள்ள இலங்கையில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களின் ஞாபகார்த்த நினைவுத் தூபியில் இன்று திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது.

இதன்போது படுகொலை செய்யப்பட்ட சிரேஸ்ட ஊடகவியலாளர் எஸ்.சுகிர்தராஜனின் திருவுருவப்படத்துக்கு மலர் அஞ்சலி செலுத்தப்பட்டு, நினைவுச்சுடர் ஏற்றப்பட்டு, மௌன அஞ்சலி செலுத்தப்பட்டு நினைவஞ்சலி நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.



கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் வடக்கு, கிழக்கு மற்றும் தெற்கு ஊடக அமைப்புகளின் ஒத்துழைப்புடன் நடைபெறும், இந்த ஞாபகார்த்த நிகழ்விற்கு ஊடகவியலாளர்கள், சமூக நலன் விரும்பிகள் மற்றும் அரசியல் பிரதிநிதிகளையும் பங்குகொள்ளும்படி அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (அ)

# கொழும்பில் கோவிட் தொற்றுக்குள்ளான சிறுவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

கொழும்பு, ஜன. 24

கொழும்பு லேடி ரிச்வே சிறுவர் வைத்தியசாலையில் கொரோனா தொற்றுக்குள்ளான 40 சிறார்கள் சிகிச்சை பெற்று வருவதாக வைத்தியசாலையின் பணிப்பாளர் மருத்துவர் ஜீ.விஜேசூரிய தெரிவித்தார்.

நாளொன்றுக்கு சுமார் 10 சிறார்கள் சிகிச்சைகளுக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுகின்றனர் எனவும் அவர் கூறினார்.

இவ்வாறு அனுமதிக்கப்படும் சிறார்களை விசேட வைத்தியர்களின் பரிசோதனைக்கு உட்படுத்தி, வைத்திய ஆலோசனைக்கு அமைய, வீடுகளிலிருந்து சிகிச்சை பெறுவதற்கு அனுமதிப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கோவிட் தொற்றுக்குள்ளான ஒரு குழந்தை மாத்திரம், தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாக கொழும்பு லேடி ரிச்வே சிறுவர் வைத்திய சாலையின் பணிப்பா ளர் மேலும் கூறினார். (அ)

## இப்படியும் நடக்கிறது...!

ஒரு கிராமத்துக்காரருக்கு லொத்தரில் பல கோடி ரூபா பரிசு விழுந்தது.

அந்த பணத்தை எடுத்துக்கொண்டு தனக்கு காரும், கோட்டு சூட்டும், தொப்பியும் வாங்கிக் கொண்டு கிராமத்திற்கு வந்தார்.

அந்த கிராமத்தில் யாருமே காரை இதற்கு முன்னர் பார்த்தது இல்லை. இவர், வருவோர் போவோரையெல்லாம் பார்த்து கையை அசைத்துக்கொண்டே சென்றார். அந்த கிராமத்தையே சுற்றி வந்தார். ஆனால், முன் பின் காரையே கண்டிருக்காத அவர் காரை ஓட்டிச் சென்றபோதிலும் ஒருவரையும் அவர் முட்டக்கூட இல்லை.

ஏனெனில் காருக்கு முன்னால் அவர் இரண்டு குதிரைகளை கட்டி ஓட்டிக்கொண்டிருந்தார்.

அவருக்கு கார் இஞ்சின் ஸ்டார்ட் பண்ண தெரியாதாம். காருக்குள் 100 குதிரை சக்திகள் இருக்கிறது. ஆனால், இவர் வெளியே 2 குதிரையை கட்டி ஓட்டிக்கொண்டு இருக்கிறார்.

அண்மையில் தமிழ்க்கட்சிகளை ஒன்றிணைத்து இந்தியாவிடம் கோரிக்கை மனுவைக் கையளிக்க ரெலோ இயக்கம் முயன்றதும், பலத்த பிரயத்தனங்களின் பின்னர் அந்த ஆவணத்தில் ஐந்து கட்சிகள் கையொப்பமிட்டு அதனை இந்தியத் தூதுவரிடம் கையளித்ததும் பழைய சங்கதி.

ஆனால் இந்தியாவிடம் கையளித்த அந்த ஆவணத்தை (அப்படியெனில் அதன் பிரதியை) மேற்கத்தைய நாடுகளின் தூதுவர்களிடமும் கையளிக்க தீர்மானித்திருப்பதாக ரெலோ இப்போது அறிவித்திருக்கின்றது.

இதுபோன்ற காரியங்களைச் செய்த அனுபவம் ரெலோக்கு புதிதுதான். அதனால்தான் மிக இலகுவாகவே முடிந்திருக்கவேண்டிய இந்த விடயம் நீண்ட இழுபறியின் பின்னர் முடிவுக்கு வந்தது. ஆனாலும் அது வெற்றியில் முடிந்தது.

அந்த ஆவணத்தை இவர்கள் இந்தியத் தூதுவரிடம் கையளிக்க திட்டமிட்டிருந்து போது, தூதுவர் திடீரென்று புதுடில்லி போனதால் அதனை கையளிக்கின்ற தினத்தை ஒத்திவைக்கவேண்டியதாயிற்று,

ஆனால், முதலில் கொடுப்பதற்கு திகதி குறிப்பிடப்பட்ட நாளுக்கு முதல்நாள் இரவே அந்த ஆவணத்தின் பிரதிகளை ரெலோ இயக்கப் பேச்சாளர் அனைத்து தூதரகங்களுக்கும் தனக்கு மிக நெருக்கமான பத்திரிகையாளர் ஒருவருக்கும் அனுப்பிவைத்திருந்தார்.

அந்தப் பத்திரிகையாளர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளருக்கு மிக நெருக்கமானவர் என்பதால் அவரே அனுப்பியிருக்கலாம் என்று சந்தேகிக்கப்பட்டபோதிலும், அதனை அவருக்கு அனுப்பியவர் ரெலோ பேச்சாளர்தான் என்பது பின்னரே தெரிய வந்தது.

ஆக, ஏற்கனவே இந்தியாவிற்கு வழங்குவதற்காக தயாரிக்கப்பட்டு தூதரகங்களுக்கும் அனுப்பப்பட்ட அந்த ஆவணத்தை மேற்குலக தூதுவர்களுக்கு மீண்டும் கொடுக்கப்போகிறோம் என்கிறார்களா? அல்லது அதற்காக புதிய ஆவணத்தை தயாரிக்கப்போகிறார்களா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

ஆனால் இந்தியாவிற்கு கொடுத்த ஆவணத்தை ஏற்கனவே தூதரக அதிகாரிகள் படித்திருப்பார்கள் என்பதால், ஒரு கவரிங் லெட்டரை வைத்து அனுப்பிவிடலாம். இல்லையெனில் மீண்டும் புதிதாக தயாரிக்க புறப்பட்டால் மீண்டுமொரு கயிறுழுப்புக்கு ரெலோ காத்திருக்கவேண்டியிருக்கும்.

- ஊர்க்குருவி

ஈழநாடு
Eelanadu
24.01.2021 திங்கட்கிழமை
பிலவ வருடம், தை 11

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
**தொலைபேசி : 021 730 1370**

# ஏமாறாமல் பேசுவது நல்லது

ஜனாதிபதியிடமிருந்து அழைப்பு வந்தால், எவ்வாறு பேசுவதென்று முடிவெடுக்கப்படுமென்று, சம்பந்தன் தெரிவித்திருக்கின்றார். அவர் தெரிவித்திருக்கும் ஒரு கருத்து முக்கியமானது. அதாவது, நாங்கள் குழப்பவும் விரும்பவில்லை அதேவேளை ஏமாறவும் விரும்பவில்லை. கடந்த ஆட்சியாளர்களுடன் சம்பந்தன் நெருக்கமாக செயற்பட்டிருந்தார். காலத்தை சரியாக கையாளாது விட்டால், இறுதியில் கூட்டமைப்பிற்கு ஏமாற்றமே மிஞ்சுமென்று பலரும் அப்போது சுட்டிக் காட்டியிருந்தனர். எனினும் சம்பந்தன் அவற்றை பொருட்படுத்தவில்லை. ரணில் தரப்போடு இணைந்து செயற்படுவதன் ஊடாக, புதிய அரசியல் யாப்பொன்றை கொண்டுவர முடியுமென்று சம்பந்தன் உறுதியாக நம்பினார்.

ஒரு விடயத்தை நம்பிச் செயற்படுவதில் தவறில்லை ஆனால் ஒரு விடயத்தை எந்தளவு நம்புவது - நம்பலாம் என்பதில் நிதானம் இருக்க வேண்டியது அவசியம். ஆனால் அவ்வாறானதொரு நிதானப் போக்கு சம்பந்தனிடம் இருந்திருக்கவில்லை. இதன் காரணமாக, இறுதியில் சம்பந்தனுக்கு ஏமாற்றமே மிஞ்சியது. எந்த ரணிலை காப்பாற்றுவதற்கு சம்பந்தன்-சுமந்திரன் ஒற்றைக் காலில் நின்றார்களோ - இறுதியில் அந்த ரணில் கொழும்பின் அதிகாரத்திலிருந்தே தூக்கி வீசப்பட்டார். ஒரு தெளிவான திட்டத்தின் அடிப்படையில் செயற்படாமல், சில தனிநபர்கள் தொடர்பான நம்பிக்கையின் அடிப்படையிலேயே சம்பந்தன் ஆட்சி மாற்றத்தை கையாண்டிருந்தார். இதன் காரணமாகவே, ஆட்சி மாற்றத்தை தமிழ் மக்களின் நலனிலிருந்து கையாளுவதில் சம்பந்தன் தரப்பு தோல்வியடைந்தது.

இன்று அரசியலமைப்பிலுள்ள 13வது திருத்தச்சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவதற்கு உதவுமாறு இந்திய பிரதமருக்கு கடிதம் எழுதியிருக்கும் கூட்டமைப்பு (இப்போது கூட்டமைப்பிற்கு வெளியில் இருப்பவர்கள் உட்பட) ஆட்சி மாற்றத்தை பயன்படுத்தி இந்த விடயத்தை வெற்றிகரமாக கையாண்டிருக்கலாம். அதற்கு இந்தியாவின் உதவியை பெறுவதற்கான வாய்ப்புக்கள் அப்போது மிகவும் பிரகாசமாகவே இருந்தது. ஆனால் அருகிலிருந்த வாய்பை கையாளாமல், கண்ணுக்குத் தெரியாத தேவதையை துரத்திப்பிடிக்கும் முயற்சியலேயே சம்பந்தன் தரப்பு காலத்தை விரயம் செய்தது.

கோட்டபாய அரசாங்கமும் புதிய அரசியல் யாப்பு தொடர்பில் பேசிவருகின்றது. தமிழ் மக்களுக்கென்று பிரத்தியே அரசியல் பிரச்சினைகளே இல்லையென்று வாதிடும் ராஜபக்ஷ தரப்பு, நிச்சயம் கூட்டமைப்பின் கருத்துக்களுக்கு செவிசாய்க்கப் போவதில்லை. இந்த நிலையிலும் கூட்டமைப்போடு பேசுவதற்கு அரசாங்கம் முற்படுமானால் - அது நிச்சயம் கூட்டமைப்பை பயன்படுத்தி தாங்கள் நினைக்கும் சில விடயங்களை செய்து முடிக்கும் தீய நோக்கம் கொண்டதாகவே இருக்கும்.

ஒரு வேளை கூட்டமைப்பின் உதவியுடன் அரசியலமைப்பிலுள்ள 13வது திருத்தத்தை இல்லாமலாக்க அல்லது பலவீனப்படுத்தவும் அரசாங்கம் முயற்சிக்கலாம். அதற்காக, இனிப்பான வார்த்தைகளை பயன்படுத்தலாம். எனவே சம்பந்தன் இப்போதாவது ஏமாந்துவிடக் கூடாதென்று சிந்திப்பது வரவேற்கக் கூடிய ஒன்றுதான். ஆனால் சொல்வது போல் ஏமாறாமல் இருப்பதுதான் எல்லாவற்றையும் விடவும் முக்கியமானது.

இன்று தமிழ் மக்கள் மத்தியில் மேற்கொள்ளப்படும் சில செயற்பாடுகள் மறைமுகமாக ராஜபக்ஷக்களின் திட்டத்திற்கே பயன்படுகின்றது. உதாரணமாக அரசியலமைப்பில் இருக்கின்ற 13வது திருத்தச்சட்டத்தை நீக்கிவிட்டு, 'ஒரே நாடு ஒரே சட்டம்' என்னும் அடிப்படையில் மேலும் இறுக்கமான ஒரு அரசியல் யாப்பை கொண்டுவருவதற்கான காய்களை, ராஜபக்ஷக்கள் மிகவும் நுட்பமாக நகர்த்திக் கொண்டிருக்கும் போது, அதற்கு பலம் சேர்க்கும் வகையில் தமிழ் சூழலிலும் 13எதிர்ப்பு முன்வைக்கப்படுகின்றது. தேர்தல் போட்டிக்காக சிலர் மேற்கொள்ளும் செயற்பாடுகள் - இறுதியில் தமிழ் மக்களின் நிலைமையை மேலும் மோசமாக்கிவிடலாம். தமிழ் மக்களின் நிலைமையோ - தாச்சியிலிருந்து குதித்து அடுப்புக்குள் விழுந்த கதையாகிவிடலாம்.

# இலங்கை குறித்த மேற்கத்தேய நாடுகளின் சுயநலமான பார்வை!

**அலசுவது இராஜதந்திரி**



அண்மையில் இலங்கைக்கு பிரித்தானியாவின் பொதுநலவாய மற்றும் அபிவிருத்தி விவகாரங்களுக்கான அமைச்சர் தாரிக் அஹமட் விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார். இந்த ஆண்டின் ஆரம்பத்தில் இலங்கை வந்த முதலாவது உயர் மட்ட வெளிநாட்டுப்பிரமுகராக பிரித்தானிய அமைச்சர் தாரிக் அஹமட் விளங்குகின்றார்.

பிரிட்டிஷ் அமைச்சர் தாரிக் அஹமட் கொழும்பு வருவதற்கு ஒரு வாரத்துக்கு முன்னரே கொழும்பில் பிரமாண்டமான முறையில் கடலில் நிர்மாணிக்கப்பட்டுவரும் கொழும்பு துறைமுக நகர அபிவிருத்தித்திட்டத்தின் முதலாவது கட்டம் பூர்த்தி நிலையை எட்டியதையடுத்து அந்த நிர்மாணத்தை பார்வையிட பொதுமக்களுக்கு அனுமதியும் வழஙகப்பட்டிருந்தது.

கொழும்பு வந்திருந்த பிரிட்டிஷ் பொதுநலவாய அமைச்சர் தாரிக் அஹமட், இலங்கையில் தமிழ் தேசிய கூட்டமைப்பினரையும் சந்தித்து உரையாடியிருந்தார். இச்சந்திப்பு வழக்கம் போன்றே சம்பிரதாய பூர்வமானதாக அமைந்திருந்தது. தமிழ் தேசிய கூட்டமைப்பினரும் தமது பழைய 'புராணத்தையே' பிரிட்டிஷ் அமைச்சர் தாரிக் அஹமட்டிடமும் குறிப்பிட்டிருந்தனர்.

பிரிட்டன் மாத்திரமல்ல. இலங்கையின் வடக்கு - கிழக்கு மக்கள் புலம் பெயர்ந்து வாழ்ந்து வருகின்ற நாடுகள் அனைத்துமே மனிதாபிமான அடிப்படையில் உதவிகளை தமது நாடுகளிலுள்ள புலம் பெயர்ந்த தமிழர்களுக்கு வழங்கியிருக்கலாம். ஆனால் அந்நாடுகள் இலங்கையுடனான உறவைப்பொறுத்தவரை தமது நலன்களுக்கே முதன்மையளித்தவையாக இருக்கின்றன.

இலங்கையில் இடம்பெற்ற மூன்று தசாப்தகால யுத்தத்தின் போது மேற்கத்தேய நாடுகள் எடுத்துக்கொண்ட நிலைப்பாடுகள் இதற்கு நல்ல உதாரணமாக இருக்கின்றன.

வடக்கு-கிழக்கில் காணாமலாக்கப்பட்ட சம்பவங்கள் குறித்து பிரிட்டனின் பொது நலவாய அமைச்சர் தாரிக் அஹமட் மௌனம் சாதித்தது பற்றி வடக்கு-கிழக்கின் காணாமலாக்கப்பட்ட உறவுகளின் அமைப்பு கவலை வெளியிட்டிருந்தது. ஆனால் பிரிட்டனோ அல்லது அதனோடிணைந்த புலம் பெயர்ந்த தமிழர்கள் வாழுகின்ற நாடுகள் இலங்கையின் வடக்கு-கிழக்கு பிரச்சினைகள் தொடர்பாக எப்போதும் மௌனம் சாதித்தே வந்துள்ளன. மாறாக இராணுவ ரீதியான உதவிகளையே இலங்கைக்கு வழங்கி வந்திருந்தன.

இலங்கையில் வடக்கு-கிழக்கின் யுத்தம் இறுதிக்கட்டத்தையடைந்தபோது புலம் பெயர்ந்த வடக்கு-கிழக்கு தமிழர்கள் தாம் வாழ்ந்து வந்த நாடுகளில் இலங்கையில் யுத்தத்தை நிறுத்த முன்வருமாறு கோரி ஆர்ப்பாட்டங்களை நடத்தியிருந்தனர்.

ஆனால் புலம் பெயர்ந்த மக்களுக்கு அவர்கள் வேண்டிய விதத்தில் ஆர்ப்பாட்டங்களையும், கூட்டங்களையும் நடத்த புலம் பெயர்ந்த நாடுகள் அனுமதியளித்திருந்தனவே தவிர எவ்வகையிலும் இலங்கையிடம் யுத்தத்தை நிறுத்துமாறு கோரவில்லை.

ஏனெனில் அரசியல் அணுகு முறைகளில் தமிழீழ விடுதலைப்புலிகளும் சர்வதேச சமூகம் எதிர்பார்த்த ஒத்துழைப்பை வழங்காத நிலையில் மேற்கத்தேய நாடுகள் வடக்கு - கிழக்கில் ஒரு முடிவின்றி இடம்பெற்று வந்த யுத்தம் ஒரு முடிவுக்கு வரவேண்டுமென்றே விரும்பியிருந்தன.

இருந்தபோதிலும் வடக்கு-கிழக்கு யுத்தம் முடிவுற்று பத்தாண்டுகளுக்கும் மேலாகியுள்ள நிலையில் இலங்கையில் காணாமல் போனோர் விவகாரம், யுத்த கைதிகள் விவகாரம், மற்றும் நில புலன்களை ஆயுதப்படையினரிடம் பறிகொடுத்து இடம்பெயர்ந்துள்ள மக்களின் பரிதாபகரமான நிலை என்பவை எவ்விதத்திலும் கண்டுகொள்ளப்படாதிருக்கின்றன.


இலங்கை பொதுநலவாய அமைப்பில் அங்கம் வகித்து வருகின்ற ஒரு நீண்டகால உறுப்பினராக இருக்கின்றது. அத்துடன் அணிசேரா அமைப்பிலும் இலங்கை ஒரு முக்கிய உறுப்பினராக இருந்து வருகின்றது.

இத்தகைய பின்னணியில் தற்போது இலங்கையில் அதிகரித்து வருகின்ற சீனாவின் ஆதிக்கம் மேற்கத்தேய நாடுகளின் கவனத்தை ஈரப்பதாகவே இருக்கின்றது. அத்துடன் இலங்கையில் இன்று நிலவிவருகின்ற மோசமான பொருளாதார நிலபரம் கூட மேற்கத்தேய நாடுகளின் கவனத்தை பெற்றதாகவே இருக்கின்றது.

எனவே இக்காரணிகளின் அடிப்படையில் இலங்கை தொடர்பிலான மேற்கத்தேய நாடுகளின் எதிர்கால நிலைப்பாடுகளை குறிப்பாக பிரிட்டனின் அரசியல் நிலைப்பாட்டை எவ்வாறு வடிவமைக்க முடியும் என்பதை அறிவதாகவே பிரிட்டிஷ் பொது நலவாய அமைச்சர் தாரிக் அஹமட்டின் இலங்கை விஜயம் அமைந்திருந்தது.

இந்நிலையில் மேற்கத்தேயம் சார்ந்த சர்வதேச சமூகத்தின் இலங்கை குறித்த பார்வை பெரிதும் சுயநலமானதாகவே இருக்கின்ற நிலையில் வடக்கு-கிழக்கு தமிழர்கள் தமது அரசியல் அபிலாஷைகள் குறித்தும் மனிதாபிமானப்பிரச்சினைகள் குறித்தும் சர்வதேச சமூகத்திடம் எதிர்பார்த்தளவு பயன்களை பெறமுடியாதென்றே கருத முடியும்.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**

உற்சாகமான நாளாக இருக்கும். பணியாளருக்கு அனுகூலம் உண்டாகும். வேண்டுதல் ஒன்றை நிறைவேற்றுவீர்கள். மனபலம் கூடும். நண்பர்களின் சந்திப்பில் எதிர்காலப் பயன் இருக்கும்.

**இடபம்**

குடும்பத்தினருடன் அதிக நேரம் செலவழிப்பீர்கள். மகிழ்ச்சி கூடும். பணியாளருக்கு சிறு சலுகை ஒன்று கிடைக்கும். லாபம் கூடும். உங்களுக்கு கீழ் பணியாற்றுவோரால் சிறு தொல்லை வரலாம்.

**மிதுனம்**

உழைப்பை அதிகம் நம்புவீர்கள். மன நிறைவு ஏற்படும். வாகனத்தில் செல்லும் போது கவனமாக இருக்கவும். குழந்தைகளால் எதிர்பாராத சந்தோஷம் வரும்.

**கடகம்**

உங்களால் தந்தைக்கு நன்மை ஏற்படும். பயம் நீங்கும். பெரியவர்களுக்கு ஆலோசனை தருவீர்கள். மகிழ்ச்சி இரட்டிப்பாகும். பெரியோரின் ஆசி கிடைக்கும். நண்பர் சந்திப்பு உண்டு.

**சிம்மம்**

குதூகலமான நாள். பழைய பயம் ஒன்று முடிவுக்கு வரும். தாயாரின் உடல்நலனில் கவனம் தேவை. கவலை தீரும். நல்லவர் ஒருவரின் உதவியுடன் செயலில் வெற்றி உண்டாகும்.

**கன்னி**

குடும்பம் விரிவடையும். நண்பருக்கு நன்மை செய்வீர்கள். உங்களது முயற்சியும் உழைப்பும் நல்ல முறையில் பலனளிக்கும். இன்று மகிழ்ச்சி தரும் நாளாக இருக்கும். மனநிம்மதி அதிகரிக்கும்.

**துலாம்**

மன வலிமை கூடும். வெளியூர் பயணங்களால் நன்மை உண்டு. வாழ்க்கைத்துணையுடன் ஏற்பட்டிருந்த மனவருத்தம் இன்று நீங்கும். குடும்பத்தினர் இடையே புரிதலும் நெருக்கமும் அதிகரிக்கும்.

**விருட்சிகம்**

தந்தை வழியில் ஏற்பட்ட செலவுகள் முடிவுக்கு வரும். அலுலகத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும். முக்கிய முடிவு ஒன்றை துணிந்து எடுத்து பலன் பெறுவீர்கள்.

**தனுசு**

புதிய முயற்சிகள் நல்லபடியாக முடிந்து நிம்மதி அளிக்கும். சகோதர, சகோதரிகளுடன் இருந்த சிறு பிணக்குகள் நீங்கும். உறவினர்கள், நண்பர்களின் செயல்கள் மகிழ்ச்சி தரும்.

**மகரம்**

முன்பைவிட எதிலும் கூடுதல் கவனம் செலுத்துங்கள். குடும்பப் பொறுப்புகளை நிறைவேற்றுவதில் வெற்றி உண்டு. மனதில் ஆன்மிக சிந்தனை அதிகரிக்கும். நட்பு வட்டம் விரியும்.

**கும்பம்**

நேற்றிருந்த சிரமங்கள் இன்று மறைந்து மகிழ்ச்சி வரும். நீங்களே சில சங்கடங்களை ஏற்படுத்திக் கொள்ள வேண்டாம். தேவையற்ற பகைமை வேண்டாம். வீண் பேச்சைத் தவிருங்கள்.

**மீனம்**

யாரையும் உதாசீனம் செய்து சிரமத்துக்குள்ளாக வேண்டாம். எடுத்த முயற்சி பலிதமாகும். சிறு சங்கடம் ஏற்பட்டு நீங்கும். அனுபவசாலிகள் தரும் ஆலோசனை உங்களுக்கு பயனுள்ளதாக இருக்கும்.


# பேரறிவாளனுக்கு 9 ஆவது முறையாக பரோல் நீட்டித்து தமிழக அரசு உத்தரவு

சென்னை, ஜன. 24

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட பேரறிவாளனுக்கு மீண்டும் 30 நாட்களுக்கு பரோல் வழங்கப்பட்டுள்ளது. இதற்கான உத்தரவு தமிழக அரசினால் நேற்று முன்தினம் வழங்கப்பட்டது.

பேரறிவாளன் 30 ஆண்டுகளுக்கு மேலாகசிறை தண்டனை அனுபவித்து வருகிறார். சிறுநீரகத் தொற்று உள்ளிட்ட உடல்நலக் குறைவு காரணமாக அவருக்கு பரோல் வழங்குமாறு அவரது தாய் அற்புதம்மாள் கடந்த மே மாதம் முதல்வர் ஸ்டாலினுக்கு மனு அனுப்பினார். முதல்வர் இதை பரிசீலித்து, பேரறிவாளனுக்கு 30 நாட்கள் பரோல் வழங்கி உத்தரவிட்டார்.

பேரறிவாளன் கடந்த மே 28ஆம் திகதி ஜோலார்பேட்டையில் உள்ள தனது வீட்டுக்கு பரோலில் சென்றார். பின்னர், மருத்துவர்களின் ஆலோசனைப் படி, வேலூர், விழுப்புரம், கிருஷ்ணகிரி உள்ளிட்ட இடங்களில் உள்ள மருத்துவமனைகளுக்கு சென்று சிகிச்சை பெற்று வந்தார். அவ்வப்போது விடுக்கப்பட்ட



கோரிக்கையின் பேரில், அவருக்கு 8 முறை பரோல் நீட்டிக்கப்பட்டது.

அவரது பரோல் இன்று 24 ஆம் திகதியுடன் முடிவடையும் நிலையில், 9 அவது முறையாக மேலும் 30 நாட்கள் பரோல் வழங்கி அரசு நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளது.

# இலங்கை பறிமுதல் செய்த படகுகளின் உரிமையாளர்களுக்கு 5.66 கோடி நிவாரணம்

## முதலமைச்சர் ஸ்டாலின் அறிவிப்பு



இராமேசுவரம், ஜன. 24

இலங்கை கடற்படையினரால் பறிமுதல் செய்யப்பட்ட 125 தமிழக விசைப்படகு உரிமையாளர்களுக்கு 5.66 கோடி ரூபா நிவாரணமும், பருவ மழைக் காலத்தில் சேதமடைந்த 105 மீன்பிடி படகுகள் மற்றும் உபகரணங்களுக்கு இழப்பீடாக ரூ.5.66 கோடி என மொத்தம் ரூ.11.32 கோடி வழங்கப்படும் என முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார். இதை ராமேசுவரம் மீனவர்கள் வரவேற்றுள்ளனர்.

தலைமைச் செயலகத்தில் முதல்வர் ஸ்டாலின் பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த மீனவர் சங்கப் பிரதிநிதிகளை சந்தித்து கோரிக்கைகளை கேட்டறிந்தார். அப்போது இலங்கை சிறையில் உள்ள மீனவர்களின் விடுதலை குறித்தும், இலங்கை கடற்படையினரால் கைப்பற்றப்பட்ட படகுகளுக்கு உரிய நிவாரணம் கோரியும் வலியுறுத்தினர்.

இந்நிலையில், முதல்வர் வெளியிட்ட அறிவிப்பில், இலங்கை கடற் படையால் பறிமுதல் செய்யப் பட்டு தற்போது இலங்கையில் பயன்படுத்த இயலாத நிலையிலுள்ள 125 படகுகளின் உரிமையாளர்களுக்கு அவர்களின் வாழ்வாதாரத்தை காத்திடும் பொருட்டு, 108 விசைப்படகு உரிமையாளர்களுக்கு தலா ரூ.5 லட்சம் வீதமும், 17 நாட்டுப்படகு உரிமையாளர்களுக்கு தலா ரூ.1.50 லட்சம் வீதமும், மொத்தம் ரூ.5.66 கோடி நிவாரணம் வழங்கப்படும்.

மேலும், வடகிழக்குப் பருவ மழைக் காலத்தில் சேதமடைந்த 105 மீன்பிடி படகுகள் மற்றும் உபகரணங்களுக்கு ரூ.5.66 கோடி வழங்கப்படும் என்று அறிவித்தார்.

# மாநில உரிமையில் தலையிடும் மத்திய அரசின் புதிய திருத்தம்

## திருமாவளவன் கண்டனம்

சென்னை, ஜன. 24

மாநில அரசின் ஒப்புதல் இல்லாமலேயே மத்திய அரசுப் பணிக்கு அதிகாரிகளை அழைத்துக் கொள்ளலாம் என திருத்தம் செய்வது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது என விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திருமாவளவன் கூறியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்திய நிர்வாக சேவை. இந்திய பொதச் சேவை அதிகாரிகளை எப்போது வேண்டுமானாலும் மத்திய அரசின் பணிக்கு அழைத்துக் கொள்ளலாம் என பா.ஜ.க. அரசு கொண்டுவரவுள்ள திருத்தத்தை விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

மாநில உரிமையைப் பறிக்கும் இந்த நடவடிக்கையை உடனடியாகக் கைவிட வேண்டும் என்று வலியுறுத்துவதாக தெரிவித்தார். மாநில அரசுகளின் கீழ் பணியாற்றும் இந்த அதிகாரிகளை மத்திய அரசுப் பணிகளுக்கு அழைப்பதென்றால், மாநில அரசின் சம்மதத்தோடு அதைச் செய்து கொள்ளலாம் என இந்திய ஆட்சிப் பணி விதிகள் 1954இல் விதி -6 குறிப்பிடுகிறது. இதுவரை அதுவே நடைமுறையில் உள்ளது.

ஆனால், இப்போது மாநில அரசு ஒப்புதல் இல்லாமலேயே மத்திய அரசு இந்த அதிகாரிகளை மத்திய அரசுப் பணிக்கு அழைத்துக் கொள்ளலாம் என விதி - 6இல் திருத்தம் செய்வதற்கு பா.ஜ.க., அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது என அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.



# மீண்டும் முற்றாக முடங்கியது தமிழ்நாடு!

சென்னை, ஜன. 24

தமிழகத்தில் கொரோனா பரவலைகட்டுப்படுத்த நேற்று ஞாயிற்றுக்கிழமை மீண்டும் முழு ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட்டது. இந்த மாதத்தில் தமிழகத்தில் முழு ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்படுவது இது இரண்டாவது தடவையாகும்.

தமிழகத்தில் கொரோனா பரவலை கட்டுப்படுத்தும் வகையில் கடந்த16ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முழு ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட்டது. தற்போது தமிழகத்தில் கொரோனா - ஒமைக்ரான் வைரஸ் பரவல் அதிகரித்து வரும் சூழலில், பொதுமக்கள் நலன் கருதி தொற்றுபரவலை கட்டுப்படுத்தும் வகையில் நேற்று மீண்டும் முழு ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட்டது.

வெளியூர்களில் இருந்து வரும்பயணிகள் நலன் கருதி, சென்னை சென்ட்ரல், எழும்பூர் ரயில் நிலையங்கள், கோயம்பேடு புறநகர் பேருந்து நிலையம் போன்ற இடங்களில் வழக்கமான வாடகை வாகனங்கள் செயலி மூலம் முன்பதிவு செய்து இயக்கப்பட்டது. கொரோனா தொற்றில் இருந்து மக்களை காக்க அரசு மேற்கொள்ளும் நோய்த் தடுப்பு நடவடிக் கைகளுக்கு பொதுமக்கள் முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்று முதல்வர் ஸ்டாலின் கேட்டுக்கொண்டுள்ளார்.

# பாராளுமன்றத்தின் பதவிக் காலத்தை நீடிக்கும் எண்ணம் அரசிடம் இல்லை

## அமைச்சர் நாமல் ராஜபக்ஷ கூறுகிறார்

**கொழும்பு, ஜன. 24**

**நாடாளுமன்றத்தின் பதவிக் காலத்தை நீடிப்பதற்கு எந்தவொரு திட்டமும் அரசிடம் இல்லை என்று அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.**

ஜனாதிபதியின் பதவிக் காலத்தையும், பாராளுமன்றத்தின் பதவிக் காலத்தையும் இரு வருடங்களுக்கு நீடிக்க வேண்டும். அதற்கான யோசனை முன்வைக்கப்படும் என்று டயானா கமகே எம்.பி. சபையில் நேற்று முன்தினம் விடுத்துள்ள அறிவிப்பு தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

தேர்தல்கள் உரிய காலப் பகுதியில் நடத்தப்படும். அவ்வாறு நடத்தித்தான் ராஜபக்ஷக்களுக்குப் பழக்கம். எனவே, பாராளுமன்றத்தின் பதவிக் காலம் நீடிக்கப்படமாட்டாது. அதற்கான தேவையும் எழவில்லை. மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை மூன்றாண்டுகளுக்குள் நிறைவேற்றுவோம்-என்றார். (அ)



### டயானாவின் கருத்துக்கு மைத்திரி கடும் எதிர்ப்பு

கொழும்பு, ஜன. 24

ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றத்தின் பதவி காலத்தை ஈராண்டுகளுக்கு நீடிக்குமாறு பாராளுமன்ற உறுப்பினர் டயானா கமகே முன்வைத்துள்ள யோசனைக்கு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

டயானா கமகேவுக்கு ஏதாவது காய்ச்சல் வந்திருக்கவேண்டும். அதனால்தான் இப்படி கூறுகின்றார். இது தொடர்பில் ஜனாதிபதியின் முடிவு என்னவென அறியவேண்டும். பாராளுமன்றத்தின் பதவி காலத்தை நீடிக்கக்கூடாது. அவ்வாறு நீடிக்கப்போய், ஜேஆருக்கு என்ன நடந்தது? நான் பதவி காலத்தை குறைத்த ஜனாதிபதி. எனவே, நீடிப்புக்கு ஆதரவளிக்கமாட்டேன்-என்றார். (அ)

# அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் யாழ்.கிளையினர் டக்ளஸுடன் சந்திப்பு

யாழ்ப்பாணம், ஜன. 24

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் யாழ்ப்பாணக் கிளையின் முக்கியஸ்தர்கள், கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை யாழ்ப்பாணத்தில் சந்தித்து யாழ்.போதனா வைத்தியசாலையின் பல்வேறு தேவைகள் உள்ளிட்ட விடயங்கள் குறித்துக் கலந்துரையாடினர்.

யாழ்.போதனா வைத்தியசாலைக்குத் தேவையான மருத்துவர், தாதியர், சுகாதாரப் பணியாளர் ஆளணி குறைபாடு தொடர்பாக முக்கியமாகச் சுட்டிக்காட்டிய அவர்கள், இதுவிடயத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சுகாதார அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டுசெல்லவேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர்.

யாழ்.போதனா வைத்தியசாலைக்கு ஈடான தர நிலையிலுள்ள நாட்டின் ஏனைய பல போதனா வைத்தியசாலைகளுடன் ஒப்பிடும்போது யாழ். போதனா வைத்தியசாலைக்கான மருத்துவ ஆளணிகள் குறைவாக இருப்பதாகச் சுட்டிக்காட்டிய அவர்கள், இதனை அதிகரித்தாலே யாழ்.போதனா வைத்தியசாலை நோயாளிகளுக்கு உரிய சேவையை முழுமையாக வழங்க முடியும் என்று சுட்டிக்காட்டினர்.

போதிய மருத்துவ, தாதிய மற்றும் சுகாதார உதவிப் பணியாளர் பற்றாக்குறை காரணமாக பல சத்திர சிகிச்சைப் பிரிவுகள், விடுதிகள் முழு அளவில் நோயாளர்களுக்கான சேவையை வழங்க முடியாதிருப்பதாகவும், குறிப்பாக பல சத்திர சிகிச்சைகளை உரிய முறையில் நடத்த முடியாதிருப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

இவற்றுக்கு மேலதிகமாக, வைத்தியசாலைக்குள் நிலவும் நிர்வாக ரீதியான சில உள்ளக பிரச்னைகள் காரணமாக சிறந்த மருத்துவ சேவைகளை வழங்கக்கூடிய மருத்துவ வல்லுநர்கள் சிலர் யாழ். போதனா வைத்தியசாலைக்குப் பணிக்கு வர முடியாத நிலை காணப்படுவதாகவும் அவர்கள் இதன்போது அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டுவந்தனர்.

இவற்றைச் செவிமடுத்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, போதனா வைத்தியசாலையின் இந்தத் தேவைகள் தொடர்பான விவரங்களை எழுத்து மூலம் தமக்கு அறியத்தந்தால், எதிர்வரும் திங்கட்கிழமை அமைச்சரவைக் கூட்டத்தின்போது சுகாதார அமைச்சரின் கவனத்துக்கு அவற்றை எடுத்துச்சென்று விரைந்த தீர்வுகாண முடியும் என்று குறிப்பிட்டார்.

மேலும், அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் யாழ் கிளை பிரதிநிதிகள் சுகாதார அமைச்சரை நேரில் சந்தித்து யாழ்.போதனா வைத்தியசாலையின் தேவைகள் குறித்துக் கலந்துரையாட ஏற்பாடு செய்து தருவதாகவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உறுதிமொழி வழங்கினார்.

இந்தச் சந்திப்பில், அரச மருத்து அதிகாரிகள் சங்கத்தின் யாழ். கிளைத் தலைவர் சத்திர சிகிச்சை நிபுணர் மருத்துவர் மதிவாணன், உபதலைவர் என்பு முறிவுச் சிகிச்சை நிபுணர் மருத்துவர் ஸ்ரீகிருஷ்ணா, செயலாளர் மருத்துவ நிபுணர் மயூரன் மற்றும் மருத்துவ நிபுணர் அறிவுச்செல்வன், கதிரியக்க நிபுணர் மருத்துவர் நிமலன் ஆகியோர் கலந்துகொண்டனர். (அ)

# தினமும் 4 மணி நேரம் மின்வெட்டு ஏற்படும்

## வெள்ளி முதல் நடைமுறைக்கு

கொழும்பு, ஜன. 24

நாடளாவிய ரீதியில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை முதல் 4 மணித்தியாலங்களுக்கு மின்சாரம் துண்டிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தகவலை இலங்கை மின்சார சபையின் ஏற்பட்டாளர் ரஞ்சன் ஜயலால் வெளியிட்டார்.

நேற்றுக் காலை ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இன்று முதல் முதல் ஒரு மணி நேரம் மின்வெட்டு இருந்தாலும், அதனை மேலும் இரண்டு மணி நேரமாக நீடிக்க வேண்டி ஏற்படும் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

ஆனால் அடுத்த வெள்ளிக்கிழமை வரை மட்டுமே இந்த செயன்முறையை தொடர முடியும். அதன் பின்னர் இலங்கை மின்சார சபை நிச்சயமாக 04 மணித்தியால மின்வெட்டை மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்படும்.

நாட்டில் தற்போது வறட்சியற்ற காலநிலை நிலவுகின்ற போதிலும் நீர்மின் நிலையங்கள் முழு கொள்ளளவுடன் இயங்கி வருகின்றன.

இதனால் எதிர்காலத்தில் குடிதண்ணீர் மற்றும் விவசாயத்துக்கு தேவையான நீரினை வழங்க முடியாத நிலை ஏற்படும்-என்றார். (அ)

# மேல் மாகாணத்தில் வெகுவாக அதிகரிக்கின்றது ஒமைக்ரோன்!

கொழும்பு, ஜன. 24

நாட்டில் இரண்டு ஒமைக்ரோன் திரிபுகளின் பரவல் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், அவற்றின் அதிக பரவல் மேல் மாகாணத்திலேயே உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக மருத்துவ ஆய்வகத்தில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் மேலும் 75 பேருக்கு ஒமைக்ரோன் வைரஸ் திரிபு கண்டறியப்பட்டதாக கலாநிதி சந்திம ஜீவந்திர தெரிவித்தார். 78 பேரின் மாதிரிகள் பரிசோதிக்கப்பட்ட நிலையில், அவர்களில் 75 பேருக்கு ஒமைக்ரோன் திரிபு அடையாளம் காணப்பட்டுள்ளதாக கலாநிதி சந்திம ஜீவந்திர குறிப்பிட்டார்.

அவர்கள், கொழும்பு, அவிசாவளை, பொரலஸ்கமுவ, ஹோமாகம, கட்டுகொட, கொஸ்கம, மடபான, பாதுக்க, வெல்லம்பிட்டி, கொலன்னாவ, கல்கிசை, நுகேகொடை, அங்கொடை, பதுளை, காலி மற்றும் ருவன்வெல்ல முதலான பகுதிகளில் பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# கட்சியை அபகரிக்கச் சதி! வீ.ஆனந்தசங்கரி அறிக்கை

கிளிநொச்சி, ஜன. 24

தமிழர் விடுதலைக் கூட்டணியினை அபகரிக்க ஒரு குழுவினர் தந்திரமாக செயற்பட்டு வருவதாகவும் அவர்களை கட்சியின் ஆதரவாளர்களும் மக்களும் நம்பவேண்டாம் என்றும் தெரிவித்து தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ. ஆனந்தசங்கரி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தமிழர் விடுதலைக் கூட்டணி ஒரு பாரம்பரியமிக்க கட்சி. இதனை பொய்களை வாரி வழங்கும் ஒரு குழுவினர் தந்திரமாக அபகரிக்கத் திட்டமிட்டு என்மேல் அவதூறு சொல்லி என்னை அவமானப்படுத்தி கட்சி ஆவணங்களையும், அலுவலகத்தையும் அபகரிக்கத்திட்ட மிட்டதோடல்லாமல், 24.01.2022 அன்று நடவடிக்கைக் குழுவைக் கூட்ட இருப்பதாகவும் 29.01.2022 அன்று நடைபெறவிருக்கும் கூட்டத்தில் நியமனங்களை வழங்க இருப்பதாகவும் அறிகிறேன். இதில் கலந்துகொள்வது சட்டவிரோதமான செயலாகும். ஆதலால் தயவு செய்து சட்டவிரோதமான இக்கூட்டத்தில் கலந்துகொள்ளாதீர்கள்.

இந்த மோசடிக்காரர்களுக்கெதிராக எனது சட்டத்தரணி மூலம் சட்ட நடவடிக்கை எடுத்துள்ளேன் என்றும் இந்த மோசடிக்காரர்களை மக்கள் நம்ப வேண்டாம் என்றும், அவர்களுடன் எவ்வித தொடர்பும் வைக்க வேண்டாம் என்றும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் அனைத்து ஆதரவாளர்களையும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்-என்றுள்ளது. (அ)

# கடன் விவகாரத்தால் குடும்பஸ்தர் வாளினால் வெட்டிப் படுகொலை!

கொழும்பு, ஜன. 24

குடும்பஸ்தர் ஒருவர் வாளால் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு நேற்று தெரிவித்துள்ளது. அம்பாந்தோட்டை, சூரிய வெவ பிரதேசத்தில் நேற்று முன்தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது எனச் சூரியவெவப் பொலிஸார் தெரிவித்தனர். முவன்பெலஸ்ஸ, சூரியவெவ பிரதேசத்தை சேர்ந்த 62 வயது நபரே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

தலையில் பலத்த காயங்கள் ஏற்பட்டே குறித்த நபர் உயிரிழந்துள்ளார்.

கடன் விவகாரமே இந்தப் படுகொலைக்குக் காரணம் என்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. படுகொலையுடன் தொடர்புடைய நபர் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் அவரைக் கைதுசெய்வதற்கான நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். (அ)

# நேரடி எரிபொருள் கொள்வனவுக்கு நிதி கோருகிறது மின்சக்தி அமைச்சு!

## இந்திய நிதியுதவியில் ஒரு பகுதியை ஒதுக்க வேண்டுகோள்

கொழும்பு, ஜன. 24

**எரிபொருள் கொள்வனவுக்கான இந்திய நிதியுதவியில் ஒரு பகுதியை தமது அமைச்சுக்கு ஒதுக்குமாறு மின்சக்தி அமைச்சு கோரிக்கை விடுத்துள்ளது.**

எரிபொருள் வழங்கல் தொடர்பாக இலங்கை மின்சார சபை, எரிசக்தி அமைச்சுக்க ளுக்கு இடையில் மோதல் ஏற் பட்டுள்ள நிலையில் இந்த கோரிக்கை விடுக்கப்பட்டுள் ளது.

அண்மையில், மின்சார உற்பத்திக்குத் தேவையான எரிபொருளை வழங்குவதற்கு அமெரிக்க டொலர்களைக் கண்டுபிடிக்குமாறு மின்சார சபையிடம், இலங்கை பெற் றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்திருந்தது.

இலங்கையின் எரிபொருள் தேவையை நிறைவேற்ற இந் தியா வழங்கும் 500 மில்லியன் டொலர் அவசர கடனுதவி தொகையில், ஒரு பகுதியையே மின்சக்தி அமைச்சு கோரியுள் ளது.

இந்தியன் ஒயில் நிறுவனத்தி டமிருந்து நேரடியாக எரிபொ ருளை வாங்க, இந்த நிதியை ஒதுக்கீடு செய்யுமாறு திறை சேரியிடம் கோரிக்கை விடுக் கப்பட்டுள்ளது.

மின்சக்தி அமைச்சர் காமினி லொக்குகே தெரிவிக்கையில்-

நெருக்கடியை சமாளிக்க குறைந்தபட்சம் ஆறு மாதங்க ளுக்கு எரிபொருள் வாங்குவ தற்கு இந்திய பணத்தின் ஒரு பகுதியை ஒதுக்குமாறு கோரி யுள்ளோம்.

தடையின்றி மின்சார விநி யோகத்தை பேணுவதற்கு இலங்கை மின்சார சபைக்கு மாதம் ஒன்றுக்கு 30 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதி யான எரிபொருள் தேவைப்படு கிறது.

எரிபொருள் கொள்வனவு செய்வதற்கு மேலதிக உதவிக ளைப் பெறுவதற்கான சாத்தி யக்கூறுகளை ஆராய இந்திய அரசாங்கத்துடன் கலந்துரை யாடல்களை மேற்கொள்ளு மாறு திறைசேரி மற்றும் வெளி விவகார அமைச்சிடம் தமது அமைச்சு கோரிக்கை விடுத்துள் ளேன்.

நிலக்கரி கொள்முதல் செய் வதற்காக திறைசேரி ஒதுக்கிய நிதியை பயன்படுத்தி எரி பொருளை வாங்குவது குறித்து பரிசீலித்து வருகிறோம். நிலக் கரிக்கான கூடுதல் கட்டணம் செப்ரெம்பர் மாதத்தில் மட் டுமே தேவைப்படும்.

அடிக்கடி விபத்துக்குள்ளாகும் நுரைச் சோலை அனல்மின் நிலையத் தின் அலகுகளில் ஒன்று எதிர் வரும் செவ்வாய்கிழமைக்குள் மீள இயக்கப்பட்டு 300 மெகா வாட் மின்சாரம் கிடைக்கப் பெறும்-என்றார்.

தற்போதைய மின் நெருக் கடி குறித்து ஜனாதிபதி கோட் டாபய ராஜபக்ஷ வாராந்த அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த வாரம் கலந்துரையாடிய நிலையில் இந்த தகவல் வெளி யாகியுள்ளது.

### சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் மின்வெட்டால் கடுமையாக பாதிப்பு

கொழும்பு, ஜன. 24

அடிக்கடி ஏற்படும் மின் வெட்டு காரணமாக தாங்கள் அளவிட முடியாத நிதி இழப்பை சந்தித்து வருவதாக அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கம் தெரி வித்துள்ளது.

சங்கத்தின் தலைவர் அசேல சம்பத், பெருமளவிலான உண வுப் பொருட்களும் வீணடிக்கப் படுவதாகத் தெரிவித்தார்.

மாலை 6 மணி முதல் 7.30 மணி வரை மின்வெட்டு அமுல் படுத்தப்படும்போது, அதன் பின்னர் யாரும் கடைகளுக்கு வருவதில்லை என அசேல சம் பத் குறிப்பிட்டார்.

சிறிய அளவிலான சிற்றுண் டிச்சாலை மற்றும் கடை உரி மையாளர்களின் தினசரி வரு மானம் குறைந்துவிட்டதாக வும், தற்போதைய போக்கு தொடர்ந்தால் அவர்கள் வணி கம் இல்லாமல் போவதாகவும் அவர் கூறினார்.

மின்வெட்டு காரணமாக பால் பொருட்கள் மற்றும் இறைச்சிப் பொருட்களை நிலை யான வெப்பநிலையில் குளிர் சாதனப் பெட்டிகளில் வைக்க முடியாமல் உள்ளதாகவும் அசேல சம்பத் தெரிவித்தார். (அ)

## என்னைச் சிறைக்குள் தள்ள ஆதாரம் இல்லை

### கூறுகிறார் மைத்திரிபால

கொழும்பு, ஜன. 24

இலங்கையில் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தினத் தாக் குதல் சம்பவத்தை அடிப்படை யாகக் கொண்டு தன்னைச் சிறைப்படுத்த முடியாது என வும், தன்னைச் சிறைப்பிடிப் பதற்கான காரணங்களோ அல்லது சாட்சிகளோ இல்லை எனவும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரி வித்தார்.

தன்னைச் சிறைப்படுத்தப் போவதாக வெளியாகும் தகவல்கள் பொய்யானவை எனவும் தவறான தகவல்கள் பரவுவதாகவும் அவர் குறிப்பிட் டார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி யின் மத்திய செயற்குழுக் கூட் டம் நேற்று முன் தினம் நடை பெற்றது. அதன்பின்னர் ஊட கங்களிடம் கருத்து வெளியிடு கையிலேயே அவர் மேற்கண்ட வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தத வது:-

நாட்டில் பிரசினைகள் காணப்படுகின்ற நிலையில் நாளை எவ்வாறு ஆட்சி அதிகா ரத்தைக் கைப்பற்றுவது என்ப தல்ல பிரச்னை. இன்று நாடு காணப்படுகின்ற நிலைமையில்



மக்களின் வறுமை, பொருளா தார நெருக்கடி, விவசாயிகள் எதிர் நோக்கியுள்ள பிரச்னை என அனைத்தில் இருந்தும் எவ்வாறு மேலெழுவது என்பது குறித்த வேலைத்திட்டங்கள் அவசியம்.

இதற்கமையயே நாம் சுதந்தி ரக் கட்சியை கட்டியெழுப்பிக் கொண்டிருக்கின்றோம். இதற் கமைய எமது வேலைத்திட்டங் களை பெப்ரவரியில் வெளியிடு வோம். இதற்கமைய எம்முடன் இணைந்துகொள்ளுமாறு நாம் ஏனைய கட்சிகளுக்கும் அழைப்பு விடுக்கின்றோம். என்னைக் கைதுசெய்யப்போவ தாக வெளியாகும் கருத்து பொய் யானது. என்னைச் சிறைப்படுத் தும் அளசுக்கு எவ்வித காரணங் களும் ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கையில் இல்லை. என் னைச் சிறைப்படுத்துவதற்கு எவ் வித சாட்சிகளோ, காரணங்க ளோ இல்லை-என்றார். (அ)

## குடும்பங்களையும், உறவினரையும் பாதுகாப்பது அல்ல எமது அரசியல்

### சஜித் பிரேமதாஸ கூறுகிறார்



கொழும்பு, ஜன. 24

ஐக்கிய மக்கள் சக்தி அரசி யல் ஒரு குடும்பத்தையோ, ஒரு தலைமுறையையோ, உறவினர் களையோ, நெருங்கிய நண்பர் களையோ பாதுகாக்கும் அரசி யல் அல்ல, ஒட்டுமொத்த நாட்டு மக்களையும் பாதுகாக்கும் அரசியல் இயக்கம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

ஏறக்குறைய 1.8 மில்லியன் நெல் விவசாயிகள் மற்றும் தோட்ட விவசாயிகளை அர சாங்கம் தன்னிச்சையாக அதல பாதாளத்தில் தள்ளியுள்ளது என்று கூறிய எதிர்க்கட்சித் தலைவர், உரம், எரிவாயு, சீனி, அரிசி மட்டுமல்ல ஒட்டுமொத்த அரசாங்கமே தரக்குறைவாக உள்ளது என்றும் கூறினார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் இளைஞர் படையின் கேகாலை மாவட்ட சபைக் கூட்டம் நேற்றுமுன்தினம் எதிர்க்கட் சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் நடைபெற்றது.

கல்வி, அரசியல், பொருளா தாரம், சமூகம், சுகாதாரம், கலா சாரம் மற்றும் சமய ரீதியில் இளைஞர்களை வலுவூட்டு வதே ஐக்கிய மக்கள் சக்தியின் நோக்கமாகும் எனவும் இளை ஞர்களை வழிநடத்த தனது அரசாங்கத்தின் கீழ் ஆலோசனைக் குழுவொன்று அமைக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

நாட்டு மக்களின் பொதுச் சொத்துக்களை நிபந்தனை யின்றி சூறையாடியவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்தி, அதனை மக்களின் நலனுக்காக பயன்படுத்துவதே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஒரே கொள்கை என எதிர்க்கட் சித் தலைவர் தெரிவித்தார்.

தமது பேராசைக்காக மக்க ளின் சொத்துக்களையும் பணத் தையும் கொள்ளையடித்து தமது பொக்கற்றை நிரப்பும் யுகம் நிச்சயமாக முடிவுக்கு வர வேண்டும் என தெரிவித்த சஜித், இது எதிர்கால அரசாங்கத்தின் நிலையான கொள்கை எனவும் கூறினார்.

கடந்த 7 வருடகால பொறுப் பற்ற ஆட்சியில் அழிக்கப்பட்ட நாட்டை மீளக் கட்டியெழுப்ப பாரிய புரட்சியை முன்னெடுப் பதாகத் தெரிவித்த எதிர்க்கட் சித் தலைவர், இந்த நாட்டில் இளைஞர் பிரதிநிதித்துவம் தொடர்பில் தான் எப்போதும் கவனம் செலுத்தியதாகவும் எதிர்கால இளைஞர் வேலைத் திட்டத்தை உறுதிப்படுத்தும் வகையில் இளைஞர் சாச னத்தை ஜனாதிபதி தேர்தலின் போது வெளியிட்டதாகவும் குறிப்பிட்டார். (அ)

## கொமிஷன் அடிக்கவே அரிசி இறக்குமதி! விவசாயிகள் கூட்டமைப்பு குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன. 24

சில தரப்புக்கள் கொமிஷன் பெறுவதற்காகவே அரிசி இறக் குமதி செய்யப்படுவதாக அகில இலங்கை விவசாயிகள் கூட்ட மைப்பு கூறுகிறது.

அகில இலங்கை விவசாயி கள் கூட்டமைப்பின் தலைவர் நாமல் கருணாரத்ன, அரசாங்க தரவுகளின்படி தற்போது சந்தையில் தேவையான அரிசி கையிருப்பு இருப்பதாக தெரி வித்தார்.

இலங்கைக்கு வருடாந்தம் 3.7 மில்லியன் மெற்றிக் தொன் அரிசி தேவைப்படுவதாகவும், 3.6 மெற்றிக் தொன்கள் நுகர் வுக்காகவும், 100,000 தொன்கள் செய்கைக்காகவும் தேவைப்படு வதாக அவர் கூறினார்.

அரசாங்க அமைப்புகளில் உள்ள தரவுகளின் அடிப்படை யில், இலங்கை 2019 இல் 4.78 மில்லியன் மெற்றிக் தொன் அரிசியையும், 2020 இல் 5.03 மில்லியன் மெற்றிக் தொன் அரிசியையும், 2021 இல் மேலும் 4 மில்லியன் மெற்றிக் தொன் அரிசியையும் உற்பத்தி செய்துள்ளது என்று நாமல் கருணாரத்ன குறிப்பிட்டார்.

எனவே, பெரும்போகத்தில் போதிய அறுவடை கிடைக்கா விட்டாலும், 2022 ஆம் ஆண் டின் நடுப்பகுதி வரை தேவை யான அரிசி கையிருப்பு நாட் டில் இருப்பதாக அவர் கூறினார்.

உள்ளூர் விவசாயிகளுக்கு கடுமையான பாதிப்பை ஏற்படுத்தும் கொமிஷன்களை பெறுவதற்காக மட்டுமே அரிசி கையிருப்பு இறக்குமதி செய்யப் படுகிறது என்பது தெளிவா கிறது என்று நாமல் கருணா ரத்ன கூறினார்.

## 1 கோடி ரூபா பெறுமதியான தங்கத்தை கடத்திய குற்றச்சாட்டில் பெண் கைது!

கொழும்பு, ஜன. 24

வெளிநாட்டிலிருந்து ஒரு கோடி ரூபா பெறுமதியான தங்கத்தை நாட்டிற்கு சட்டவிரோதமான முறையில் கடத்தி வந்த பெண் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் சுங்கப்பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார். விமான நிலைய சுங்கப்பிரிவினர் முன்னெடுத்த சோதனையில் இந்தக் கைது இடம்பெற்றுள்ளது.

இதன்போது குறித்த பெண்ணிடம் இருந்து 799 கிராம் தங்கம் கைப் பற்றப்பட்டுள்ளது என்று சுங்கப் பிரிவினர் தெரிவித்தனர். கைதானவர் கண் டியைச் சேர்ந்த 30 வயதுடையவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# வெடிபொருட்களுடன் இளைஞர் ஒருவர் கைது

கொழும்பு, ஜன. 24

களுத்துறை, ஹொறணைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொஸ்கொடவெல்ல மகுருவல பிரதேசத்தில், வெடிபொருட்களைத் தம்வசம் வைத்திருந்த இளைஞர் ஒருவரைப் பாணந்துறை பிரிவின் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

போதுருவதண்ட பிரதேசத்தைச் சேர்ந்த 29 வயது நபரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்போது 22 டெட்டனேட்டர்கள், 150 வோட்டர் ஜெல்கள் என்பவை கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# மக்கள் பொறுப்புடன் செயல்பட்டால் கோவிட் பரவலை கட்டுப்படுத்தலாம்

## சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே சுட்டிக்காட்டு



**கொழும்பு, ஜன. 24**

**பொதுமக்கள் பொறுப்புடன் செயற்பட்டால், கொவிட் பரவல் நிலையைக் கட்டுப்படுத்த முடியும் என இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.**

தற்போதைய சுதந்திரமான சூழலை பொதுமக்கள் அனுபவிக்கின்ற அதேநேரம், முகக்கவசம் அணிதல் உள்ளிட்ட விதிமுறைகளைப் பின்பற்ற வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தற்போது மூன்றாம் தடுப்பூசியாக பைஸர் செயலூக்கி தடுப்பூசி செலுத்தப்படுகிறது.

அதனைப் பொதுமக்கள் செலுத்திக்கொள்ள வேண்டும்- என்றார். (அ)

# அரசின் வசமுள்ள நிறுவனங்களின் ஊழியர்களுக்கும் 5 ஆயிரம் ரூபாய்

கொழும்பு, ஜன. 24

அரசாங்கத்தின் வசமுள்ள நிறுவனங்களினது ஊழியர்களுக்கும் 5 ஆயிரம் ரூபாய் மாதாந்த மேலதிக கொடுப்பனவை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய அரச நிறுவனங்களின் ஊழியர்களுக்கும் இந்த மேலதிக கொடுப்பனவை வழங்குவதற்கான சுற்றிக்கை திறைசேரி செயலாளரால் அனுப்பப்பட்டுள்ளது.

இம்மாதம் முதல் வழங்கப்படவுள்ள இந்த 5 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவை அரசின் வசமுள்ள நிறுவனங்களின் ஊழியர்களுக்கும் வழங்குவது தொடர்பான தீர்மானத்தை அதன் பணிப்பாளர் சபை மேற்கொள்ளும் என்றும் அது தொடர்பில் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள், திறைசேரியின் செயலாளர் எஸ்.ஆர். ஆட்டிகலவினால் குறித்த நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்டுள்ள சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதற்கமைய, கொடுப்பனவு அற்ற விடுமுறையில் உள்ள ஊழியர்களுக்கு இந்த மேலதிக கொடுப்பனவு வழங்கப்படமாட்டாது என்றும் அரைவாசி கொடுப்பனவுடன் விடுமுறையில் உள்ள ஊழியர்களுக்கு 5,000 ரூபாய் கொடுப்பனவில் 50 சதவீதம் மாத்திரம் வழங்கப்படும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

### நனோ நைதரசன் உர இறக்குமதி குறித்து விசாரணை

கொழும்பு, ஜன. 24

இந்தியாவிலிருந்து நெனோ நைதரசன் உரத்தை இறக்குமதி செய்வதில் இடம்பெற்றதாகக் கூறப்படும் முறைகேடு தொடர்பில் விசாரணைகளை முன்னெடுப்பதற்கு இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு தீர்மானித்துள்ளது. ஆணைக்குழுவிற்கு கிடைத்த முறைப்பாட்டுக்கு அமைய கிடைத்த தகவல்களை அடிப்படையாகக்கொண்டு விசாரணைகள் முன்னெடுக்கப்படும் ஆணைக்குழு கூறியது.

# ஆட்பதிவு திணைக்கள கிழக்கு உதவி ஆணையாளர் நியமனம்

திருமலை, ஜன. 24

ஆட்பதிவு திணைக்களத்தின் கிழக்கு மாகாணத்திற்கு பொறுப்பான உதவி ஆணையாளராக இ.திரவியராஜ் நேற்று முன்தினம் பதவியேற்றார்.

அக்கரைபற்று ஆலையடி வேம்பு பிரதேசத்தை பிறப்பிடமாக கொண்ட இவர் முன்னாள் பொத்துவில் பிரதேச செயலாளராகப் பணிபுரிந் துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)

# இஸ்லாமியபாடப் புத்தகங்களை திரும்பப்பெற்றது கல்வி அமைச்சு

கொழும்பு, ஜன. 24

ஒரே நாடு, ஒரே சட்டம் ஜனாதிபதி செயலணியினால் புத்தகங்களின் உள்ளடக்கம் குறித்து கவலை தெரிவித்ததை அடுத்து, 6, 7, 10 மற்றும் 11 ஆம் வகுப்புகளுக்கான இஸ்லாமிய பாடப் புத்தகங்களை உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் கல்வி அமைச்சு திரும்பப் பெற்றுள்ளது.

சிங்களம் மற்றும் தமிழில் பாடப் புத்தகங்களை திரும்பப் பெறுமாறும், பாடப் புத்தகங்கள் திருத்தப்படும் வரை மாணவர்களுக்கு வழங்குவதை நிறுத்துமாறும் தேசிய மற்றும் ஏனைய பாடசாலைகளின் அதிபர்களுக்கு, கல்வி வெளியீடுகள் திணைக்கள ஆணையாளர் நாயகம் பி.என்.இல்லப்பெரும அறிவுறுத்தியுள்ளார்.

ஜனாதிபதி செயலணி மற்றும் பாதுகாப்பு அமைச்சின் கீழ் இயங்கும் தேசிய பாதுகாப்பு கற்கைகள் நிறுவகம் ஆகியன புத்தகங்களின் உள்ளடக்கங்களில் சில வார்த்தைகளில் தீவிரவாத சித்தாந்தத்தின் கருத்துக்களைக் கொண்டிருக்கலாம் என்பதால் மீளாய்வு செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து தெரிவித்ததன் அடிப்படையில், அந்த புத்தகங்கள் மீளப் பெறப்பட்டுள்ளன.

"அந்தப் பாடப்புத்தகங்களில் சிறிய மாற்றங்களைத் தவிர குறிப்பிடத்தக்க மாற்றங்களைச் செய்ய வேண்டிய அவசியமில்லை. விரைவில் அவற்றைச் சரிசெய்து, திருத்தப்பட்ட புத்தகங்களை விநியோகிப்போம்" என்று ஆணையாளர் நாயகம் தெரிவித்தார்.

பாடப் புத்தகங்களை ஆய்வு செய்து, பரிந்துரைகளை வழங்க, ஆய்வுக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்களை விசாரிக்கும் ஜனாதிபதி ஆணைக்குழு தனது பரிந்துரைகளில், தேசிய மற்றும் மாகாண பாடசாலைகள் மற்றும் சர்வதேச பாடசாலைகளில் மாணவர்களின் பயன்பாட்டிற்காக வெளியிடப்படும் அனைத்து மதக் கல்வி நூல்களும் ஏதேனும் தீவிரவாத அல்லது பயங்கரவாத இலக்கியங்கள் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ சேர்க்கப்பட்டுள்ளதா என்பதை ஆய்வு செய்யவேண்டும் என குறிப்பிட்டுள்ளது. (அ)

# நெற்செய்கை மேற்கொள்ள முடியாத காணிகளில் பாசிப்பயறு செய்கையை மேற்கொள்ள தீர்மானம்

கொழும்பு, ஜன. 24

நெற்செய்கை மேற்கொள்ள முடியாத காணிகளில் பாசிப்பயறு செய்கையை மேற்கொள்வதற்கு அரசாங்கம் ஒத்துழைப்பு வழங்குவதற்கு அரசாங்கம் எதிர்பார்ப்பதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் செயல்பாடுகளை கண்காணித்தபோது கிடைத்த தகவல்களை கருத்திற்கொண்டு ஜனாதிபதி இந்த தீர்மானத்தை எடுத்துள்ளார் என ஜனாதிபதி ஊடகப்பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நீர்ப்பாசன வசதிகள் இன்மையால், சிறுபோகத்தில் நெற்செய்கையை மேற்கொள்ள முடியாத காணிகளில் இடைப்போகத்தின் மேலதிக பயிராக பாசிப்பயரை பயிரிடுமாறு ஜனாதிபதி கூறியுள்ளார்.

பாசிப்பயறு செய்கைக்கு தேவையான விதைகளை பெற்றுக் கொள்வதற்கு விவசாயிகளுக்கு நிதி உதவிகளை வழங்குமாறு விவசாய அமைச்சுக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# துறைமுகநகரில் படம் எடுக்க சீன வங்கிக்கு பணம் செலுத்தும் அறிவிப்பினால் சர்ச்சை!

கொழும்பு, ஜன. 24

சீனாவால் அமைக்கப்பட்ட கொழும்பு துறைமுக நகரில் புகைப்படம் எடுப்போர், வீடியோ பதிவு செய்வோர் அதற்கான கட்டணங்கள் சீன வங்கிக்கு செலுத்தவேண்டும் என்ற அறிவிப்பு சர்ச்சையைக் கிளப்பியுள்ளது.

துறைமுக நகரில் பார்வையாளர்களுக்கான பிரிவு நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

சமூக ஊடக பயனர்கள் முன்வைத்து வரும் கோரிக்கைகள் காரணமாக துறைமுக நகரில் தொழில்முறை ரீதியாக படங்கள் மற்றும் வீடியோக்களை எடுக்க விரும்புவோருக்கு கட்டணம் செலுத்தும் முறைகளை அறிமுகப்படுத்தவேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

துறைமுக நகரில் அறிமுகப்படுத்திய கட்டண விவரங்கள் நேற்று முன்தினம் சமூக ஊடகங்களில் அதிகம் பகிரப்பட்டன.

அதில் மக்கள் தனிப்பட்ட பயன்பாட்டுக்காக தொழில்முறை படங்களையும் வீடியோக்களையும் எடுக்க விரும்பினால் 30,000 முதல் 50,000 ரூபா வரை கட்டணம் செலுத்த வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒரு மணி நேரம் முதல் மூன்று மணிநேரம் வரை 2 முதல் 5 பேர் வரை படப்பிடிப்பில் ஈடுபட்டால் 30,000 ரூபா வசூலிக்கப்படும். இந்த எண்ணிக்கை 6 முதல் 10 பேராக இருந்தால் 50,000 ரூபா அறவிடப்படும்.

வணிக நோக்கங்களுக்காக ஒரே நேரத்தில் 10 பேருக்கும் குறைவானோருடன் புகைப்படம் அல்லது வீடியோ எடுத்தால் 100,000 ரூபா கட்டணம் வசூலிக்கப்படும் என அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு துறைமுக நகர நிறுவனத்தின் பொதுஜன தொடர்பு தலைவர் கஸ்ஸப சேனரத் இந்தக் கட்டண விபரங்களை உறுதிப்படுத்தியுள்ளார்.

எனினும் இந்தக் கட்டண அறவீடு செல்பி எடுக்க விரும்புவோருக்கு பொருந்தாது என்று அவர் கூறியுள்ளார்.

இந்தக் கட்டணம் இலாபம் ஈட்டுவதற்காக அல்ல. துறைமுக நகர பராமரிப்புக்காக அறவிடப்படுகிறது என கஸ்ஸப கூறினார்.

எனினும் இந்தக் கட்டணங்களை ஏன் சீன வங்கிக் கிளையில் செலுத்த வேண்டும் என்ற விமர்சனங்கள் எழுந்துள்ளன.

இந்நிலையில் துறைமுக நகரில் சீன வங்கி தனது உள்ளூர் கிளையை பராமரித்து வருவதே இதற்குக் காரணம் என கொழும்பு துறைமுக நகர நிறுவனத்தின் பொதுஜன தொடர்பு தலைவர் கஸ்ஸப சேனரத் தெரிவித்துள்ளார். (அ)

# காதல் விவகாரத்தால் இளைஞர் கழுத்து வெட்டிப் படுகொலை!

கொழும்பு, ஜன. 24

இளைஞர் ஒருவர் கண்ணாடித்துண்டால் கழுத்து வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு நேற்று தெரிவித்துள்ளது.

கம்பஹா, கடவத்தை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பிரதேசத்தில் நேற்றுமுன் தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது எனக் கடவத்தைப் பொலிஸார் தெரிவித்தனர்.

கடவத்தை, கோணஹேன பிரதேசத்தை சேர்ந்த 20 வயது நபரே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்த நபர், ராகம வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போதிலும் அவர் சிகிச்சை பலனின்றி மரணமடைந்தார்.

சம்பவத்துடன் தொடர்புடைய நுவர வீதி, கடவத்தை பிரதேசத்தைச் சேர்ந்த 19 வயது நபரைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

காதல் விவகாரமே இந்தப் படுகொலைக்குக் காரணம் என்று பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. (அ)



# எதிர்க்கட்சிகள் வகுக்கும் வியூகம் என்ன?

**அரசாங்கத்துக்கு எதிராக மக்களின் எதிர்ப்பு தீவிர மடைந்து வந்தாலும், அதனை அறுவடை செய்யக்கூடிய நிலையில் எதிரணி இல்லை. எதிரணிகள் பலவீனமாக இருப்பதுதான் ராஜபக்ஷக்களின் இன்றைய பலம். எதிர்க்கட்சிகளிடம் உறுதியான கட்டமைப்புக்களோ அல்லது, கவர்ச்சிகரமான தலைமையோ இல்லாததது தான் இதற்குக் காரணம்.**



**பவித்திரன்**

விலைவாசி உயர்வும் பொருளாதாரப் பிரச்னையும் தீவிரமடைந்துவரும் நிலையில் அரசின் மீதான அதிருப்தி கடுமையாக அதிகரித்துவருகின்றது. உச்சத்தைத் தொடும் விலைவாசி உயர்வுக்கு மத்தியில் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு வாக்களித்து அவரை ஜனாதிபதியாகத் தெரிவு செய்த சிங்கள மக்கள் விரக்தியடைந்துள்ளார்கள். அரசாங்கத்துக்கான செல்வாக்கு கடுமையாக வீழ்ச்சியடைந்திருப்பதை ராஜபக்ஷக்களின் அடுத்த வாரிசான நாமல் ராஜபக்ஷவே பத்திரிகைப் பேட்டி ஒன்றில் ஒப்புக்கொண்டிருக்கின்றார்.

ஆனால், அரசாங்கத்துக்கு எதிராக மக்களின் எதிர்ப்பு தீவிரமடைந்து வந்தாலும், அதனை அறுவடை செய்யக் கூடிய நிலையில் எதிரணி இல்லை. எதிரணிகள் பலவீனமாக இருப்பதுதான் ராஜபக்ஷக்களின் இன்றைய பலம். எதிர்க்கட்சிகளிடம் உறுதியான கட்டமைப்புக்களோ அல்லது, கவர்ச்சிகரமான தலைமையோ இல்லாததுதான் இதற்குக் காரணம்.

ஜனாதிபதித் தேர்தல் ஒன்றை எதிர்கொள்வதற்கு மக்களைக் கவரக்கூடிய, உறுதியான ஆளுமை உள்ள ஒருவரை களமிறக்குவது அவசியம். எதிரணியில் அதற்குப் பொருத்தமான ஒருவர் இல்லை என்ற கருத்துள்ளது.

1977 முதல் தொடர்ச்சியாக பதவியில் இருந்த ஜெயவர்த்தன, பிரேமதாச, விஜயதுங்க என 17 வருடமாகத் தொடர்ந்த ஐ.தே.க. ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவர 1994 ல் சந்திரிகா களமிறங்கினார். இரண்டு பதவிக்காலத்துக்கு அவரது அதிகாரம் தொடர்ந்தது. சந்திரிகாவை பொறுத்தவரை மீண்டும் ஒருமுறை களமிறங்கும் நிலையில் அவர் இல்லை. அவரது கட்சியும் இன்று அவரது கட்டுப்பாட்டில் இல்லை. அது மைத்திரி கட்டுப்பாட்டில் உள்ளது.

ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க முதலில் சந்திரிகாவுடனும், பின்னர் மஹிந்த ராஜபக்ஷவுடனும் போட்டியிட்டு தோல்வியடைந்தார். ஜனவசீகரம் மிக்க கவச்சிகரமான ஒரு தலைவராக அவரால் சாதிக்க முடியவில்லை. ராஜபக்ஷக்களின் ஆட்சி தொடர்வதற்கும் ரணிலின் பலவீனமான தலைமைதான் காரணமாகச் சொல்லப்பட்டது.

2015 இலும் இதேபோன்ற ஒரு நிலை காணப்பட்ட போது, சந்திரிகா குமாரதுங்கவின் முயற்சியால், மைத்திரிபால சிறிசேன பொதுவேட்பாளர் என்ற பெயரில் களமிறக்கப்பட்டு, எதிர்க்கட்சிகள், சிறுபான்மையினக் கட்சிகளின் ஆதரவுடன் அவரால் ஆட்சியைப் பிடிக்க முடிந்தது. குறிப்பாக ராஜபக்ஷ அணிக்குள் இருந்தே வேட்பாளரை களமிறக்கியதும், அவரது ஆதரவாளர்கள் பலரை உடைத்தெடுத்தமையும்தான் மைத்திரியின் வெற்றிக்கு காரணம். இப்போதும் அதே போன்ற காய்நகர்த்தலொன்றை சந்திரிகா முன்னெடுத்திருக்கின்றார்.

புதிய அணி ஒன்றை உருவாக்கும் முயற்சியில் சந்திரிகா குமாரதுங்கா இறங்கி இருக்கின்றார் என வெளிவரும் செய்திகள் கொழும்பு அரசியலைப் பரபரப்பாக்கியிருக்கின்றது. முக்கிய பிரமுகர்கள் பலரையும் சந்தித்து இது குறித்து பேச்சுவார்த்தைகளை அவர் முன்னெடுத்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது. 2015 இல் இவ்வாறான முயற்சிக்கு சந்திரிகாவுடன் இணைந்து செயற்பட்ட மங்கள சமரவீர இன்றில்லை. ஆனால், சந்திரிகாவின் உறவினரான குமார வெல்கம சந்திரிகாவுடன் இணைந்து செயற்படுவதாகத் தெரிகின்றது.

2010 இல் பொதுவேட்பாளராக களமிறக்கப்பட்ட சரத் பொன்சேகா தோல்வியடைந்தார். 2015 இல் மைத்திரிபால சிறிசேன வெற்றிபெற்றார். இறுதியாக 2019 இல் சஜித் பிரேமதாச களமிறங்கி கோட்டாபயவிடம் தோல்வியடைந்தார்.



2015 இல் ராஜபக்ஷ அணியிலிருந்தே மைத்திரியை வெளியே எடுத்து எதிர்க்கட்சிகளினதும், சிறுபான்மைக் கட்சிகளினதும் ஆதரவுடன் களமிறக்கியதால் தான் அவரால் வெற்றிபெற முடிந்தது. அவ்வாறான நிலைமை ஒன்றும் தற்போது இல்லை. ஜனாதிபதித் தேர்தலுக்கு இன்னும் மூன்று வரடங்கள் இருந்தாலும் கூட, ராஜபக்ஷக்களின் குடும்பத்திலிருந்து களமிறங்கக்கூடிய பலமான ஒருவரை எதிர்கொள்ளத்தக்க வகையில் ஒருவரைத் தேடும் முயற்சியில் சந்திரிகா குமாரதுங்க இப்போதே இறங்கியிருக்கின்றார்.

இதற்காக சந்திரிகா எவ்வாறான ஒரு வியூகத்தை வகுக்கப்போகின்றார்? அது எந்தளவுக்கு வெற்றிபெறும் என்பதைத் தான் கொழும்பு அரசியல் வட்டாரங்கள் கூர்ந்து அவதானிக்கின்றன.

மீண்டும் ஒரு பொதுவேட்பாளரைக் களமிறக்கினால் மட்டும்தான் ராஜபக்ஷக்களைத் தோற்கடிக்க முடியும் என்ற கருத்து தென்னிலங்கையில் வலுவாக உள்ளது. அதற்குப் பொருத்தமான கவர்ச்சிகரமான ஒரு வேட்பாளரைத் தேடும் முயற்சியில் தென்னிலங்கை அரசியல் சக்திகள் இறங்கியுள்ளன. குறிப்பாக சந்திரிகா குமாரதுங்கவை மையப்படுத்தி இந்த முயற்சிகள் இடம்பெறுகின்றது.

மார்ச் 5 ஆம் திகதி குமார் வெல்கம தலைமையிலான புதிய லங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகம் திறந்துவைக்கப்படவிருக்கின்றது. குறிப்பிட்ட கட்சி ஏனைய தலைவர்களையும் இணைத்துக் கொண்டு செல்வதை இலக்காகக் கொண்டிருக்கும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. ராஜபக்ஷக்களுடன் அதிருப்தியடைந்திருக்கும் சுசில் பிரேமஜயந்த, அர்ஜூனா ரணதுங்கக, அநுர பிரிய தர்சன யாப்பா ஆகியோரையும் இணைத்துக்கொள்வது குறித்து ஏற்கனவே பேச்சுக்கள் இடம்பெற்றிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் கூட்டணியின் சார்பில் பொதுவேட்பாளராக யார் களமிறக்கப்படுவார்கள் என்பதற்கான பதில் உத்தியோகபூர்வமாக இதுவரையில் வெளிவரவில்லை. கருஜயசூரிய, சம்பிக்க ரணவக்க ஆகியோரின் பெயர்கள் இதற்காக முன்வைக்கப்பட்டது. ஆனால், இந்த இருவரும் பரந்தளவுக்கு ஆதரவைப் பெறக்கூடிய கவர்ச்சிகரமான தலைவர்களாகக் காணப்படவில்லை.

இந்தப் பின்புலத்தில் மற்றொரு பெண்மணியை களமிறக்குவதற்கு சந்திரிகா திட்டமிடுகின்றாரா என்ற கேள்வி எழுகின்றது. மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் - நீதித்துறை அவர்களுடைய கட்டுப்பாட்டுக்குள் சென்றிருந்த நிலையில் துணிச்சலுடன் அதனை எதிர்த்து நின்று - அதற்காக தனது அதி உயர் பதவியையும் பறிகொடுத்த முன்னாள் பிரதம நீதியரசர் சிராணி பண்டாரநாயக்கதான் அவர்.

சிராணி பண்டாரநாயக்கவை பிரதம நீதியரசராக சந்திரிகாதான் ஜனாதிபதியாக இருந்தபோது நியமித்தார். பலத்த சர்ச்சைகளுக்கு மத்தியில் அந்த நியமனத்தை சந்திரிகா மேற்கொண்டார். பின்னர், ராஜபக்ஷக்களுடன் எதிர்த்து நின்ற நிலையில் அவரது பதவி பறிக்கப்பட்டது. அதன்போது இடம்பெற்ற சர்ச்சைகளின்போது கடுமையான அச்சுறுத்தல்கள், அழுத்தங்கள் மத்தியில் துணிச்சலுடன் செயற்பட்டு தன்னை ஒரு இரும்புப் பெண்மணி என்பதை சிரானி பண்டாரநாயக்க வெளிப்படுத்தினார்.

அதன்பின்னர் மைத்திரி - ரணில் ஆட்சியில் பறிக்கப்பட்ட பதவி அவருக்கு வழங்கப்பட்டபோதிலும், ஒரேயொரு நாள் மட்டும் பதவியிலிருந்துவிட்டு அவர் ஓய்வு பெற்றார்.

அதன்பின்னர் பொது அரங்குகளுக்கு வராதிருந்த அவரை கடந்த வாரம் முக்கிய நிகழ்வு ஒன்றில் சந்திரிகா மேடையேற்றினார்.

கடந்த சனிக்கிழமை பண்டாரநாயக்க ஞாபகர்த்த மண்டபத்தில் நடைபெற்ற சந்திரிகா குறித்த நூல் வெளியீட்டில் பிரதான உரையாற்ற சிரானி அழைக்கப்பட்டிருந்தார். நாடு மிகவும் மோசமான ஒரு நிலையில் இருக்கின்றது என தனது உரையின் போது தெரிவித்த சிரானி பண்டாரநாயக்க, “மக்கள் அனைவரும் நாடு எமக்கு என்ன செய்யும் எனச் சந்திக்கவில்லை. நாட்டுக்காக நாம் என்ன செய்ய முடியும் என்பதையிட்டே சிந்திக்கின்றார்கள்”எனக் குறிப்பிட்டார்.

நீண்ட காலத்தின் பின்னர் சிரானி மேடையேற்றப்பட்டமையும், அவர் தனது மௌனத்தை கலைத்திருப்பதும் முக்கியமான ஒரு செய்தியைச் சொல்லியிருப்பதாகவே கருதப்படுகின்றது.

இந்த நிகழ்வுக்கு முன்னர் காலிமுகத்திடல் பண்டாரநாயக்க சிலைக்கு அருகில் இடம்பெற்ற பண்டாரநாயக்க நினைவுதின நிகழ்விலும் ஆளும் மொட்டு அணியின் உறுப்பினர்கள் பலரையும் காணமுடிந்தது.

சந்திரிகா மூன்று முனைகளில் காய் நகர்த்துவதாகத் தெரிகின்றது. முதலாவது, ஆளும் கட்சியிலுள்ள ராஜபக்ஷ அதிருப்தியாளர்களை தன்னுடன் இணைப்பது. இரண்டு எதிரணிகளை ஒன்றிணைப்பது. மூன்றாவது கவர்ச்சி கரமான பொது வேட்பாளர் ஒருவரை கண்டறிவது. இந்த முயற்சியில் சந்திரிகா எந்தளவுக்கு முன்னோக்கிச் செல்கின்றார் என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

அதேவேளையில் அதிகாரத்தைத் தக்கவைப்பதற்காக ராஜபக்ஷக்களும் இதற்கு எதிரான வியூகம் ஒன்றை அமைப்பார்கள் என்பதை நிச்சயமாக எதிர்பார்க்கமுடியும். ஆக கொழும்பு அரசியல் அடுத்துவரும் வாரங்களில் சுவாரஸ்யமானதாகவே இருக்கப்போகின்றது. ■

# சங்ககால கொற்கை துறைமுகத்தை அடையாளம் காண ஆய்வு

**முரளிதரன் காசி விஸ்வநாதன்**



தமிழ்நாட்டில் 2022ஆம் ஆண்டில் ஏழு இடங்களில் அகழாய்வும் சங்க கால கொற்கைத் துறைமுகத்தை அடையாளம் காண்பதற்கான முன்கள ஆய்வும் நடைபெறும் என்று தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அறிவித்திருக்கிறார்.

இது தொடர்பாக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்தத் தகவல்களைத் தெரிவித்துள்ளார்.

"அண்மைக் காலத்தில் கீழடி, அழகன்குளம், கொற்கை, சிவகளை, ஆதிச்சநல்லூர், கொடுமணல், மயிலாடும்பாறை, கங்கைகொண்ட சோழபுரம் ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுகள் தமிழகத்தின் தொன்மையைப் புதிய காலக்கணிப்பு மூலம் பல நூற்றாண்டு காலத்திற்கு முன்னோக்கி எடுத்துச் சென்றுள்ளது.

கீழடி அகழாய்வு மற்ற அகழாய்வுகளுக்கு முன்னோடி அகழாய்வாகத் திகழ்கிறது. இதுவரை கங்கைச் சமவெளியில் கி.மு. ஆறாம் நூற்றாண்டிலிருந்த "நகரமயமாக்கம்" தமிழ்நாட்டில் இல்லையென்றும், பிராமி எழுத்து மௌரியர் தோற்றுவித்தது என் றும் கருதுகோள்கள் இருந்தன. அத்தகைய கருதுகோள்களுக்கு அறிவி யல்பூர்வமாக விடையளித்துள்ளது கீழடி அகழாய்வு. தமிழ்நாட்டில் கி.மு. ஆறாம் நூற்றாண்டிலேயே நகரமயமாக் கம் ஏற்பட்டிருந்தது என்பது மட்டுமல்லாமல், படிப்பறிவும் எழுத்தறிவும் பெற்ற மேம்பட்ட சமூகமாக விளங்கியதை கீழடி அகழாய்வு நிலைநிறுத்தியுள்ளது.

சிவகளை முதுமக்கள் தாழியில் கண்டெடுக்கப்பட்ட உமி நீங்கிய நெல் மணிகளின் காலம் கி.மு. ஆயிரத்து நூற்று ஐம்பத்தைந்து எனக் கண்டறியப்பட்டுள்ளது.

"தண் பொருநை" என்று அழைக்கப்பட்ட தாமிரபரணி ஆற்றங்கரை நாகரிகம் மூவாயிரத்து இருநூறு ஆண்டுகளுக்கு முற்பட்டது என்பதை அறிவியல்பூர்வ ஆய்வுகளின் அடிப்படையில் உறுதி செய்ய முடிகிறது என்பதை கடந்த 8-9-2021 அன்று சட்டப்பேரவையில் அறிவிக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து, தமிழ்நாட்டின் அனைத்துப் பகுதிகளையும் உள்ளடக்கி வரலாற்றுக்கு முந்தைய காலம் முதல் வரலாற்றுக் காலம் வரையிலான தொல்லியல் இடங்களில் அகழாய்வு செய்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. அந்த வகையில் தற்போது 2022 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் ஏழு இடங்களில் அகழாய்வுகள் செய்யப்படவுள்ளன.

1. கீழடி மற்றும் அதனைச் சுற்றியுள்ள இடங்கள் (கொந்தகை, அகரம், மணலூர்), சிவகங்கை மாவட்டம் - எட்டாம் கட்டம்.

2. சிவகளை, தூத்துக்குடி மாவட்டம் - மூன்றாம் கட்டம்.

3. கங்கைகொண்டசோழபுரம், அரியலூர் மாவட்டம்- இரண்டாம் கட்டம்.

4. மயிலாடும்பாறை, கிருஷ்ணகிரி மாவட்டம்- இரண்டாம் கட்டம்.

5. வெம்பக்கோட்டை, விருதுநகர் மாவட்டம் - முதல் கட்டம்.

6. துலுக்கர்பட்டி, திருநெல்வேலி மாவட்டம்- முதல் கட்டம்.

7. பெரும்பாலை, தர்மபுரி மாவட்டம்- முதல் கட்டம்.

மேலும், தாமிரபரணி ஆற்றின் முகத்துவாரத்திற்கு எதிரில் கடற்கரையோரத்தில் முன்கள புலஆய்வு மேற்கொள்ளவும் திட்டமிடப்பட்டுள்ளது. இதன் முதற்கட்டமாக, சங்ககாலக் கொற்கைத் துறைமுகத்தின் தொல்லியல் வளத்தினைக் கண்டறிய கடலோரங்களில் ஆய்வினை மேற்கொள்ள இந்தியக் கடலாய்வு பல்கலைக்கழகம் மற்றும் தேசிய கடல்சார் தொழில்நுட்ப நிறுவனம் ஆகியவற்றுடன் இணைந்து கடல் ஆய்வு மேற்கொள்ளப்படும்.

இந்த அகழாய்வுப் பணிகள் வரும் பிப்ரவரி மாதம் முதல் வாரத்தில் தொடங்கி செப்டம்பர் மாதம் இறுதி வரை நடைபெறவுள்ளது. மேலும் இதற்காக வரவு-செலவு திட்டத்தில் ஒதுக்கப்பட் டுள்ள 5 கோடி ரூபாய் நிதியில் அகழாய்வுகள், களஆய்வுகள் மற்றும் சங்க காலக் கொற்கைத் துறைமுகத்தினை அடையாளம் காண முன்களப் புல ஆய்வுப் பணிகளும் மேற்கொள்ளப்படவுள்ளன" என்று முதலமைச்சரின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது அகழாய்வு நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ள கீழடி, சிவகளை, கங்கைகொண்ட சோழபுரம், மயிலாடும்பாறை ஆகியவற்றில் ஏற்கனவே அகழாய்வுகள் நடந்துள்ள நிலையில்,



அவற்றின் அடுத்தகட்ட அகழ்வுகள் அங்கு நடைபெறவுள்ள. மீதமுள்ள துலுக்கர்பட்டி, வெம்பக்கோட்டை, பெரும்பாலை ஆகிய இடங்களில் புதிதாக அகழாய்வுப் பணிகள் துவங்கவிருக்கின்றன.

திருநெல்வேலி மாவட்டம் வள்ளியூருக்கு தென்கிழக்கில் 6 கி.மீ தொலையில் நம்பி ஆற்றின் இடது கரையில் அமைந்துள்ளது துலுக்கர்பட்டி. இவ்வூரிலிருந்து கண்ணநல்லூர் செல்லும் சாலையில் 2.5. கி.மீ தொலைவில் ஒரு வாழ்வியல் மேடு காணப்படுகிறது. இந்தப் பகுதி விளாங்காடு என்றழைக்கப்படுகிறது. இரும்பு மற்றும் தொடக்க வரலாற்றுக் காலத்தைச் சார்ந்த இந்த வாழ்வியல் மேடானது 2.5 மீ உயரத்தில் 12 ஹெக்டேர் பரப்பளவில் விரிந்து காணப்படுகிறது.

இங்கே சிவப்பு வண்ணம், கருப்பு - சிவப்பு வண்ணம், கருப்பு வண்ணம், வெண்புள்ளி இட்ட கருப்பு-சிவப்பு வண்ண மட்கல ஓடுகளும் குறியீடுகள் கொண்ட மட்கல ஓடுகளும் ஈமத்தாழிகளும் கிடைத்து வருகின்றன. இந்தப் மேட்டில் கிடைக்கப்பெற்றுள்ள அரிய தொல்பொருட்களைக் கருத்தில் கொண்டு தொல்லியல் ஆய்வுகளை நடத்த மாநில தொல்லியல் துறை முடிவுசெய்துள்ளது.

இத்தொல்லியல் தளத்தின் உருவாக்கம், குடியேற்ற முறை, தொல்பொருட்களின் தன்மை ஆகியவற்றை கண்டறிவதற்காக இந்த அகழாய்வு நடத்தப்படவுள்ளது. நம்பி ஆற்றின் கரையில் இரும்புக்காலப் பண்பாட்டின் வேர்களைத் தேடுவதும் இவ்வகழாய்வின் ஒரு நோக்கமாகும். இத்தொல்லியல் தளமானது சிவகளை, ஆதிச்சநல்லூர் தொல்லியல் களங்களின் சமகாலத்தைச் சேர்ந்ததாகக் கருதப்படுகிறது.

விருதுநகர் மாவட்டம், சிவகாசியில் இருந்து தெற்கே 15 கி.மீ. தொலைவில் வைப்பாறு ஆற்றின் இடது கரையில் வெம்பக்கோட்டை என்ற ஊர் அமைந்துள்ளது. 25 ஏக்கர் பரப்பளவில் உள்ள இந்தப் பகுதி மேட்டுக்காடு என்றும் உச்சிமேடு என்றும் அழைக்கப்படுகிறது. இங்கே நுண்கற்காலம் முதல் இடைக்காலம் வரை தொடர்ந்து மக்கள் வாழ்ந்ததற்கான அடையாளங்கள் இந்தத் தொல்லியல் மேட்டில் வெளிப்பட்டு வருகின்றன. இத்தொல்லியல் மேடு தற்போதைய நிலப்பரப்பில் இருந்து 2 மீ உயரத்தில் அமைந்திருக்கிறது. இங்கு இரும்புக் கால மட்கல ஓடுகள் மிகுதியாக சிதறிக்கிடக்கின்றன. மேலும், இம்மேட்டில் நுண்கற்கருவிகள், பல்வேறு வகையான மணிகள், அலங்கரிக்கப்பட்ட சங்கு வளையல்கள், காதணிகள், சுடுமண்ணால் ஆன வட்டுகள், இரும்புக் கசடுகள் ஆகியவையும் கிடைத்துள்ளன.

காலவாரியாக அதிக எண்ணிக்கையில் நுண்கற்கருவிகளை சேகரிப்பதே தற்போது மேற் கொள்ளப்படவுள்ள அகழாய்வின் நோக்கமாகும்.

தர்மபுரி மாவட்டம் பென்னாகரம் - மேலச்சேரி சாலையில் பென்னாகரத்தில் இருந்து 25 கி.மீ தொலைவில் பாலாறு ஆற்றின் இடது கரையில் அமைந்திருக்கிறது. பெரும்பாலை. வரலாற்று முக்கியத்துவமுள்ள இந்த ஊர் கொங்கு நாட்டின் வடவெல்லையாக இருந்ததாகக் கருதப்படுகிறது.

இங்குள்ள தொல்லியல் மேடு தற்போதைய நிலவியல் அமைப்பிலிருந்து 3 முதல் 4 மீட்டர் உயரத்தில் 75 ஏக்கர் நிலப் பரப்பளவில் விரிந்து காணப்படுகிறது. இம்மேட்டில் கருப்பு-சிவப்பு நிற மட்கல ஓடுகள், கருப்பு நிற மட்கல ஓடுகள், சிவப்பு பூச்சுப்பெற்ற மட்கல ஓடுகள், சிவப்பு நிற மட்கல ஓடுகள் ஆகியவை கிடைக்கின்றன.

இங்குள்ள செம்மனூர் சிவன் கோயில் எதிரே ஈமக்காடுப் பகுதி ஒன்று காணப்படுகிறது. அண்மையில் ஈமக்காட்டுப் பகுதியின் நடுவே கால்வாய் வெட்டியபோது உயரமான வயல்வெளியில் 50க்கும் மேற்பட்ட கல்வட்டங்கள் கண்டறியப்பட்டன.


இந்தப் பகுதியில் கிடைத்துள்ள தொல்பொருட்கள் மூலம் தொடக்க வரலாற்றுக் காலத்தைப் பற்றிய சிறந்த நுண்ணறிவை பெறமுடியுமென நம்பப்படுகிறது. இந்தத் தொல்லியல் தளத்தின் உருவாக்கம், குடியேற்றம், தொல்பொருட்களின் தன்மை ஆகியவற்றை வெளிப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு அகழாய்வு நடத்தப்படும். மேலும் பாலாற்றின் ஆற்றங்கரைகளில் இரும்புக்காலப் பண்பாட்டின் வேர்களைத் தேடுவதும் அகழாய்வின் நோக்கமென மாநில அரசு தெரிவித்திருக்கிறது.

- பி.பி.சி.


# புலமைச் சிகரம் — தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்


36.




A என்ற கீலம் புள்ளிக் கோடுகள் வழியே மடிக்கப்பெற்று B, என்ற கீலம் பெறப்பட்டது. B புள்ளிக் கோடுகள் வழியே மடிக்கப்பட்டு C என்ற கீலம் பெறப்பட்டு குறித்த பகுதிகள் வெட்டி அகற்றிய பின் விரிக்கும் போது தோற்றமளிக்கும் விதத்தைக் காட்டும் உரு எது?




37. **பற்சில்லு A ஆனது 1 தடவை சுழலும் போது பற்சில்லு B ஆனது 7 தடவைகள் சுழலும். எனவே பற்சில்லு B 63 தடவைகள் சுழலும்போது பற்சில்லு A சுழலும் தடவைகளின் எண்ணிக்கை யாது?**




1) 9 2) 8 3) 7

38. **பின்வரும் சம்பவத்தை ஒழுங்குபடுத்தினால் அமையும் விடை யாது?**

A - சாயம் போடுதல்

B - தேநீர் குடித்தல்

C - நீரைக் கொதிக்க வைத்தல்.

D - கோப்பையினுள் சாயம், சீனி, சுடுநீர் ஆகியவற்றைக் கலத்தல்.

E - பாத்திரங்களைக் கழுவுதல்.

1) CADBE 2) BEACD 3) ECADB

39. 50 வினாக்களைக் கொண்ட வினாப்பத்திரம் ஒன்றில் ஒரு வினாவிற்குச் சரியாக விடையளித்திருப்பின் 2 புள்ளிகளும் தவறான விடையளித்திருப்பின் மேலதிகமாக 1 புள்ளியும் கழிக்கப்படும். மாணவன் ஒருவர் 79 புள்ளிகளைப் பெற்றிருப்பின் எத்தனை வினாக்களுக்குச் சரியாக விடையளித்திருப்பான்?

1) 43 2) 45 3) 38

40. **மறைந்துள்ள சொல்லை இனங்கண்டு சரியான விடையினைத் தெரிவு செய்க.**

வண்டியில் உண்டு கண்டியில் இல்லை.
மனதில் உண்டு மணத்தில் இல்லை.
கம்பத்தில் உண்டு கப்பத்தில் இல்லை.

1) கத்தி 2) வனம் 3) கனம்

## விடைகள்

*36. 1* *38. 3* *40. 2*
*37. 1* *39. 1*

## 24.01.2022 திங்கட்கிழமை — CHANNEL-1

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | விஞ்ஞானம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் |
| | | மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | விஞ்ஞானம் |

## 24.01.2022 திங்கட்கிழமை — CHANNEL - 2

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-02 | கணிதம் |
| 09.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | தரம்-03 | தமிழ் |
| 11.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-04 | தமிழ் |
| 01.15 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-05 | தமிழ் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | கணிதம் |
| 06.00 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 06.45 | தரம்-03 | தமிழ் |
| 07.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 08.15 | தரம்-04 | தமிழ் |
| 09.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-05 | தமிழ் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-03 | தமிழ் |
| 01.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-04 | தமிழ் |
| 02.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 03.30 | தரம்-05 | தமிழ் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |



# ஆழ்கடல் மீனவர்களுக்கு விசேட வேலைத்திட்டம்

அம்பாறை, ஜன. 24

அம்பாறை மாவட்ட ஆழ் கடல் மீனவர்கள் எதிர்கொள்ளும் கடல் சார் அனர்த்த தவிர்ப்பு முன் ஆயத்தம் தொடர்பான வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அம்பாறை மாவட்டமேலதிக அரசாங்க அதிபர் வீ. ஜெகதீசன் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் அக்கரைப்பற்று பிரதேச செயலகத்தில் நடைபெற்ற ஆழ்கடல் மீனவர்கள் எதிர்கொள்ளும் கடல் சார் அனர்த்த தவிர்ப்பு முன்ஆயத்தம் தொடர்பான ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தென்கிழக்குப் பல்கலைக்கழக தகவல் தொழில்நுட்பப் பீடத்துடன் இணைந்து அம்பாறை மாவட்டத்திலுள்ள ஆள்கடல் மீனவர்கள் சுறாவளி மற்றும் கடல் அனர்த்தங்களின் போது அனர்த்த குறைப்பு தொடர்பான தொழில்நுட்ப ரீதியிலான வேலைத் திட்டங்களை முன்னெடுத்துள்ளது.

மேலும் ஒலுவில் துறைமுக நிர்மாணிப்பின் பின்னர் அம்பாறை மாவட்ட கரையோர பிரதேசங்களில் கூடுதலான கடலரிப்பு ஏற்பட்டு வருவதால், மீனவர்களும், பொது மக்களும் பல இன்னல்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இதனால் இக் கடலரிப்பினை நிரந்தரமாக தடுப்பதற்கான வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன. குறிப்பாகஆழ்கடல் மீன்பிடி படகுகளுக்கு தொலைத் தொடர்பு கருவி (ஜி.பி.எஸ்) பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது-என்றார்.

இக் கூட்டத்தில் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் ஓய்வு பெற்ற மெஜர் ஜெனரல் சுதந்த ரணசிங், அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் அம்பாறை மாவட்ட உதவிப் பணிப்பாளர் எம்.ஏ.சீ.எம். றியாஸ், கடற்படை அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள், துறைசார் அதிகாரிகள் மற்றும் மீனவ பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். (அ)

# அட்டப்பளத்திலுள்ள ஒரேயொரு பாடசாலையும் மூடப்படும் நிலை!

## ஆசிரியர் இன்மையே காரணமென்கிறது பாடசாலைச்சமுகம்

**கல்முனை, ஜன. 24**

**கல்முனைவலயத்துக்குட்பட்ட, நிந்தவூர் கோட்டத்தின்கீழுள்ள அட்டப்பளத்திலுள்ள ஒரேயொரு தமிழ்ப்பாடசாலையும் மூடப்படும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ளதாக அங்குள்ள பாடசாலைச்சமுகம் கவலை தெரிவிக்கிறது.**

அங்குள்ள அட்டப்பளம் விநாயகர் வித்தியாலயமே இவ்விதம் மூடப்படும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ளது. ஆசிரியர் போதுமானளவு இன்மையே இதற்கான காரணம் என பாடசாலைச் சமுகம் குற்றம் சாட்டுகிறது.

136மாணவர்கள், 14ஆசிரியர்களுள்ள விநாயகர் வித்தியாலயத்தில் குறிப்பாக முக்கிய பாடமாகக்கருதப்படும் கணிதம் விஞ்ஞானம் போன்ற கருப் பாடங்களுக்கு ஆசிரியர் இல்லை.

கணிதபாடத்திற்காக இருந்த ஒரேயொரு ஆசிரியர் கடந்த இருவருடங்களுக்கு முன்னர் இடமாற்றம்பெற்றுச் சென்றிருந்தார். அன்றிலிருந்து அந்த மாணவர்களுக்கு கணிதம் கற்கும் வாய்ப்பு உரிமை மறுக்கப்பட்டிருந்தது.

கடந்த மாதம் விஞ்ஞான பாடத்திற்கெனவிருந்த ஒரேயொரு ஆசிரியரும் மாகாணத்திலிருந்து இடமாற்ற உத்தரவு பெற்று இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார்.

ஆக, பின்தங்கிய பிரதேசத்திலுள்ள ஒரேயொரு பாடசாலையையும் இழுத்துமூடப்படுவதற்கு இவ்விடமாற்றங்கள் செய்யப்படுகின்றனவா என அச்சமுகம் கேள்வியெழுப்புகிறது.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம் மற்றும் ஆலயங்கள் உள்ளிட்ட பொதுநலஅமைப்புகள் இது விடயத்தில் போர்க்கொடி தூக்கியுள்ளன.

தேவையான ஆசிரியர்கள் நியமிக்கப்படாவிடின் திவீர போராட்டமொன்றை முன்னெடுக்கப்போவதாகவும் அவை சூளுரைத்துள்ளன. (அ)

# கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் ஆசிரியர்-மாணவர் வரவு குறைகிறது

மட்டக்களப்பு, ஜன. 24

கிழக்கு மாகாணத்திலுள்ள பெரும்பாலான பாடசாலைகளுக்கு அண்மைக்காலமாக ஆசிரியர் மாணவரின் வரவு குறைந்துவருகிறது.

சமகால குளிர் மற்றும் பனிக்காலநிலை மற்றும் வேகமாகப்பரவிவரும் கொரோனாச்சூழல் என்பவையே அதற்கு காரணமாகும்.

சமகாலத்தில் ஆசிரியர் மாணவர் மத்தியில் காய்ச்சல், தடிமன், தலைப்பாரம் போன்ற அறிகுறிகள் தென்படுவதோடு ஒருவித உடற்சோர்வும் காணப்படுகிறது.இதனால் அவர்கள் பாடசாலை செல்வதை தவிர்த்துவருகிறார்கள்.

கோவிட் காரணமாக கிழக்கில் பாடசாலைகள் ஏதாவது மூடப்பட்டுள்ளனவா என்று கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் திருமதி நகுலேஸ்வரி புள்ளநாயகத்திடம் கேட்டபோது,

இதுவரை அப்படியொரு நிலை ஏற்படவில்லை. எந்தவொரு பாடசாலையும் மூடப்படவில்லை. எனினும் மட்டக்களப்பு கல்முனை போன்ற பிரதேசங்களில் சில பாடசாலைகளில் மாணருக்கு கொவிட் உறுதிப்பட்டுள்ள காரணத்தினால் குறித்த பாடசாலைகளின் குறித்த வகுப்புகள் மாத்திரம் மூடப்பட்டுள்ளன. அதே வேளை மாணவர் மற்றும் ஆசிரியர்களின் வரவும் குறைவடைந்து வருவது அவதானிக்கப்பட்டுள்ளது. மாண வருக்கு வக்சீனும் ஏற்றப்பட்டு வருகின்றது. க.பொ.த. உயர்தரப் பரீட்சையை எதிர்கொண்டுள்ள இன்றைய சூழலில் பெற்றொரும் தம் பிள்ளைகள்மீது கூடிய கவனம்செலுத்தவேண்டும்-என்றார். (அ)





# கருவப்பங்கேணி வனத்து அந்தோனியார் பொன்விழா திருப்பலி ஆயர் தலைமையில்

மட்டக்களப்பு, ஜன. 24

மட்டக்களப்பு புனித வனத்து அந்தோனியார் ஆலயத்தின் 50 ஆவது ஆண்டு நிறைவு விழா விசேட திருப்பலி நேற்று சிறப்பிக்கப்பட்டது .

ஆலய வலராற்றைச் சிறப்பிக்கும் ஏகாந்தச்சுடர் மலர் வெளியீட்டு நிகழ்வும் பங்கு மாணவர்களுக்கான முதல்நன்மையும், உறுதிபூசுதல் அருள் அடையாளம் வழங்கும் நிகழ்வும் விசேட திருப்பலியாக மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயரினால் ஒப்புக்கொடுக்கப்பட்டது .

மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயர் ஜோசப் பொன்னையா ஆண்டகை தலைமையில் அருட்தந்தையர்கள் இணைந்து ஒப்புக்கொடுக்கப்பட்ட திருப்பலியை தொடர்ந்து ஆலய பொன் விழாவை சிறப்பிக்கும் வகையில் ஆயர் மற்றும் அருட்தந்தை டொமினிக் சாமிநாதன் அடிகளாரருக்கு பொன்னாடை போர்த்தி நினைவு சின்னங்கள் வழங்கி ஏகாந்தச்சுடர் மலர் வெளியிட்டு வைக்கப்பட்டது .

மட்டக்களப்பு , அம்பாறை மறைமாவட்டத்தின் கத்தோலிக்க திருச்சபையில் பணியாற்றிய அருட்தந்தை டொமினிக் சாமிநாதன் அடிகளார் 1971 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மட்டக்களப்பு இருதயபுரம் பங்கின் பொறுப்புக்குருவாக பணியாற்றிய காலத்தில் கருவப்பங்கேணி கிராமத்தில் ஆன்மீக பணியை ஆரம்பித்து அப்பகுதியில் புனித வனத்து அந்தோனியாரின் ஆலயத்தினை அமைப்ப தற்கான அடித்தளத்தை இட்டு இந்த ஆலயம் அமைக் கப்பட்டது.

# கல்லடியில் கோர விபத்தில் தந்தை பலி! மகன் படுகாயம்

மட்டக்களப்பு, ஜன. 24

மட்டக்களப்பு-கல்முனை பிரதான வீதியில் கல்லடி சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்துக்கு முன்னால் நேற்று முன் தினம் மாலை 5.30 மணியளவில் கோர விபத்தொன்று இடம் பெற்றது.

காத்தான்குடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட, கல்லடி பிரதான வீதியில், ஆரையம்பதி பக்கமிருந்து மட்டக்களப்பு நோக்கி மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த தந்தை மற்றும் மகன் மீது பிக்கப் வாகனம் மோதிவிட்டு தப்பிச் சென்றுள்ளது.

இதனையடுத்து பிக்கப் மோதிய வேகத்தில் முன்னால் சென்று கொண்டிருந்த நெல் அறுவடை செய்யும் கனரக இயந்திர வாகனத்துக்குள் மோட்டார் சைக்கிள் சிக்கியதாகவும், இதில் தந்தை ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளார் எனவும் படுகாயமடைந்த மகன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்விபத்தில் உயிரிழந்தவர் ஆரையம்பதியைச் சேர்ந்த சிவராசா எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் குறித்த நெல் அறுவடை செய்யும் இயந்தரத்திர வாகனத்தின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார் எனவும், இது குறித்த மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (அ)



# நேற்று நள்ளிரவு முதல் புதிய கட்டுப்பாடுகள்!

## தனது திருமணத்தை இரத்து செய்தார் நியூசிலாந்து பிரதமர்

வெலிங்டன், ஜன. 24

புதிய கொரோனா கட்டுப்பாடுகள் நேற்று நள்ளிரவு முதல் அமுலுக்குவந்துள்ள நிலையில், நியூசிலாந்து பிரதமர் ஜெசிந்தா ஆர்டெர்ன் தனது திருமண நிகழ்வையும் இரத்து செய்துள்ளார்.

தொற்றுநோயால் மிகவும் அழிவுகரமான தாக்கங்களை அனுபவித்த ஆயிரக்கணக்கான நியூசிலாந்து நாட்டவர்களை விடதான் வேறுபட்டவன் அல்லன்



என்றும் கூறியுள்ளார்.

கடுமையாக நோய்வாய்ப்பட்டிருக்கும்போது அன்பானவருடன் இருக்க இயலாமை என்பது மிகவும் வேதனைக்குரிய விடயம் என்றும் ஜெசிந்தா ஆர்டெர்ன் குறிப்பிட்டுள்ளார்.

ஒமைக்ரோன் மாறுபாட்டின் பரவலை அடுத்து முழு நாடும் மிக கடுமையான கட்டுப்பாடுகள் அமுல்படுத்தப்பட்டுள்ளன. நியூசிலாந்தில் இதுவரை 15,104 நோயாளிகள் அடையாளம் காணப் பட்டுள்ளதுடன் 52 இறப்புகள் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# நடிகையின் உடல் சாக்குப்பையில்!

## துண்டாடப்பட்டு வீசப்பட்டது

டாக்கா, ஜன. 24

பங்களாதேஷின் பிரபல நடிகையின் உடல் துண்டு துண்டாக வெட்டப்பட்டு சாக்கு மூட்டையில் கண்டெடுக்கப்பட்ட விவகாரத்தில் திடுக்கிடும் தகவல் வெளியாகியுள்ளது. அவரது கணவரே கொலையை செய்தமை தெரியவந்துள்ளது.

நடிகை ரைமா இஸ்லாம் ஷிமு பங்களாதேஷ் திரைத்துறையில் நன்குஅறிமுகமானவர். 40 வயதான இவர் 1998 இல் திரைத்துறையில் அறிமுகமாகி, 25க்கும் மேற்பட்ட படங்களில் நடித்துள்ளார். பெரும்பாலும் இரண்டாவது ஹீரோயினாகவே நடித்தார். எனினும், பங்களாதேஷில் பிரபலமாகியிருந்தார். ஏராளமான டிவி சீரியல்களிலும் நடித்துள்ளார். அதோடு டிவி சீரியல்களை தயாரிக்கும் பணியிலும் ஈடுபட்டிருந்தார்.

ஷூட்டிங்கிற்காக மாவாவுக்குச் சென்றதாகக் கூறி விட்டு வீட்டை விட்டு வெளியேறிய ரைமா காணாமல் போனார். குடும்பத்தினரால் அன்றிரவு பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டது.

இதுகுறித்து பொலிஸார் விசாரணை நடத்தியதில் தலைநகர் டாக்காவில் உள்ள ஹஸ்ரத்பூர் பாலம் அருகே ரைமாவின் உடல் இரண்டு சாக்கு மூட்டைகளில் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. அவரது உடல் துண்டாக்கப்பட்டு, சாக்குப் பைகளில் வைக்கப்பட்டிருந்தது.

ஷிமுவின் உடலை மீட்ட பிறகு, அவரது சகோதரர் ஷாஹிதுல் இஸ்லாம் கோகோன் மாலையில் மிட்ஃபோர்ட் மருத்துவமனையில் சடலத்தை அடையாளம் காட்டினார். பின்னர், ஷிமுவின் கணவர் நோபலுக்கு எதிராக ஷாஹிதுல் இஸ்லாம் கோகோன் முக்கிய குற்றவாளியாகக் கூறி வழக்குப் பதிவு செய்தார். இந்த வழக்கில் நோபலின் நண்பர் ஃபர்ஹாத் மீதும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

ஷிமுவின் சகோதரர் ஷாஹிதுல் இஸ்லாம் கோகோன் கூறுகையில், அவரது மைத்துனர் நோபல் ஷிமுவை அடிக்கடி அடிப்பார். மேலும், "அவர் போதைக்கு அடிமையானவர்.

இந்நிலையில் தொடர்பாக விசாரித்த பொலிஸார் ரைமா உடல்பாகங்கள் சாக்குமூட்டையில் கட்டப்பட்ட பிளாஸ்ரிக் கயிறு அவரது கணவரான நோபலின் காரில் இருப்பதை பார்த்து அவரிடம் கிடுக்கிப்பிடி விசாரணை நடத்தினர். இதில் தனது மனைவியை கொலை செய்ததை ஒப்புக்கொண்டார்.

தற்போது மூன்று நாட்கள் காவலில் உள்ள ஷெகாவத் /ஹசைன் நோபல், மனைவியை கொன்றது எப்படி? எதற்காக கொலை செய்யப்பட்டார் என்பதை வாக்குமூலமாக தெரிவித்துள்ளார்.

அதன்படி, ரைமா இஸ்லாம் ஷிமுவுக்கு ரி.வி சனல் அதிகாரி ஒருவருடன் தவறான தொடர்பு இருந்துள்ளது. இதுகுறித்து நோபல் பல முறை கண்டித்தும் ரைமா தனது தொடர்பை துண்டிக்கவில்லை என தெரிகிறது.

இந்நிலையில் இந்த விவகாரம் தொடர்பாக ரைமாவுக்கும் நோபலுக்கும் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. அப்போது ஆத்திரமடைந்த நோபல் தனது மனைவியை கழுத்தை நெரித்துக் கொன்றுள்ளார். பின்னர் என்ன செய்வது என்று தெரியாமல் தனது நண்பர் பர்ஹாத்தின் உதவியை நாடியுள்ளார்.

பின்னர் இருவரும் சேர்ந்த ரைமாவின் உடலை துண்டு துண்டாக வெட்டி உடல் பாகங்களை இரண்டு சாக்கு மூட்டையில் கட்டி தங்களின் காரில் வைத்து கடத்தியுள்ளனர். மிர்பூர் அருகே சாக்கு மூட்டைகளை வீச திட்டமிட்டுள்ளனர். ஆனால் அது முடியாமல் போனதால் ஹஸ்ரத்பூர் பாலம் அருகே வீசியுள்ளனர்.

மனைவியை நோபல்கொலை செய்த போது அவரது இரண்டு பிள்ளைகளும் வீட்டில் தூங்கிக் கொண்டிருந்தாக கூறியுள்ளார். (அ)

## சிரியாவில் சிறை உடைப்பு:

# ஐ.எஸ்.-குர்திஷ் படைகள் இடையே கடும் மோதல்

டமஸ்கஸ், ஜன. 24

சிரியாவின் வடகிழக்கு பகுதியில் உள்ள சிறையை உடைத்து கைதிகளை வெளியேற்ற ஐ.எஸ். போராளிகள் முயற்சித்ததை அடுத்து அங்கு கடுமையான மோதல் நடைபெற்று வருகிறது.



இந்த மோதலில் குறைந்தது 28 குர்திஷ் பாதுகாப்புப் படையினரும், ஐந்து பொதுமக்களும் 58 ஐ.எஸ். போராளிகளும் கொல்லப்பட்டதாக சிரியாவின் கண்காணிப்பு அமைப்பு தெரிவித்துள்ளது.

அமெரிக்காவின் வான்வழித் தாக்குதல்களின் ஆதரவுடன் குர்திஷ் தலைமையிலான படைகள் வியாழக்கிழமை முதல் ஹசாகா நகரில் ஐ.எஸ். போராளிகளுடன் மோதிவருகின்றன.

கிட்டத்தட்ட 03 ஆண்டுகளுக்கு முன்பு சிரியாவில் குவேரான் சிறைச்சாலை மீதான தாக்குதல் தோற்கடிக்கப்பட்ட நிலையில் ஐ.எஸ். போராளிகளின் இலட்சியமாக இது கருதப்படுகின்றது.

குறித்த தளத்தில் ஐ.எஸ் உறுப்பினர்கள் என சந்தேகிக்கப்படும் 3,500 பேர் தங்கியுள்ளனர் என்றும் இதில் சில தலைவர்கள் உள்ளனர் என்றும் ஒரு கண்காணிப்பு குழு கூறுகிறது.

சிறைச்சாலை உடைப்பை அடுத்து அங்கிருந்து தப்பி ஓடியவர்களில் நூற்றுக்கணக்கான ஜிஹாதிகள் மீண்டும் கைது செய்யப்பட்டனர் என்றும் சிலரை பிடிப்பதற்கான முயற்சிகள் இடம்பெறுவதாக மனித உரிமைகளுக்கான சிரிய கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

சிறைச்சாலையைச் சுற்றி வளைத்து, அருகிலுள்ள சுற்றுப்புறங்களைக் கட்டுப்படுத்த குர்திஷ் பாதுகாப்புப் படையினர் போராடி வருகின்ற நிலையில் அப்பகுதியில் இருந்த குடியிருப்பாளர்கள் வீடுகளை விட்டு வெளியேறி வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# ஒமைக்ரோன் துணை மாறுபாடு இங்கிலாந்தில் கண்டுபிடிப்பு!

லண்டன், ஜன. 24

இங்கிலாந்தில் புதிய ஓமைக்ரோன் துணை மாறுபாட்டின் 400க்கும் மேற்பட்ட தொற்றுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

இங்கிலாந்தில் முழு ஜீனோம் சீக்வென்சிங் மூலம் 426 ஓமைக்ரோன் பிஏ.2 நோய்த்தொற்றுகள் உறுதி செய்யப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சுகாதாரத் தலைவர்கள் இதை விசாரணையில் உள்ள மாறுபாடு என அழைக்கின்றனர்.

லண்டன் மற்றும் தென்கிழக்கு ஆகிய பகுதிகளில் அதிக எண்ணிக்கையில் உறுதிப்படுத்தப்பட்ட தொற்றுகள் உள்ளன.

பிஏ.1 எனப்படும் ஆதிக்கம் செலுத்தும் ஒமிக்ரோன் விகாரத்தை விட இந்த மாறுபாடு வேகமாக பரவக் கூடும் என்று ஆரம்பகால ஆராய்ச்சி கூறுகிறது, ஆனால் விஞ்ஞானிகள் இதைப் பற்றிய உறுதியான நிலை குறைவாக இருப்பதாக வலியுறுத்துகின்றனர்.

துணை மாறுபாடு பற்றி மேலும் பகுப்பாய்வு மேற்கொள்ளப்படுகிறது. இது பற்றி இந்த கட்டத்தில் அதிகம் அறியப்படவில்லை. பிஏ.2 முதலில் எங்கிருந்து வந்தது என்று தெரிய வில்லை. நவம்பர் நடுப்பகுதியில் இருந்து இதுவரை 40 நாடுகள் மொத்தம் 8,040 பிஏ.2 தொற்றுகளை பதிவு செய்துள்ளன.

முதலாவதாக பிலிப்பைன்ஸில் உறுதிசெய்யப்பட்டது. மேலும் 6,411 தொற்றுகள் கண்டறியப்பட்ட டென்மார்க்கில் இருந்து அதிக எண்ணிக்கையிலான மாதிரிகள் பதிவேற்றப்பட்டுள்ளன.

இந்தியா (530), சுவீடன் (181), மற்றும் சிங்கப்பூர் (127) ஆகியவை 100 க்கும் மேற்பட்ட தொற்றுகளை பதிவுசெய்த பிற நாடுகள் ஆகும்.

பிரித்தானிய சுகாதார பாதுகாப்பு முகவரகம், புதிய பிறழ்வுகள் தோன்றுவது எதிர்பாராதது அல்ல என்று கூறுகிறது.

பிரித்தானிய சுகாதார பாதுகாப்பு முகவரகத்தின் கொவிட் சம்பவ இயக்குநர் மருத்துவர் மீரா சந்த் இதுகுறித்து கூறுகையில், 'வைரஸ்கள் பரிணாமம் மற்றும் மாற்றமடைவது இயல்பு, எனவே தொற்றுநோய் தொடரும்போது புதிய மாறுபாடுகள் வெளிவருவதை நாம் தொடர்ந்து பார்ப்போம் என்று எதிர்பார்க்கலாம்' என கூறினார். (அ)

# சிங்கப்பூர் கால்வாய் ஒன்றுக்குள் சடலமாக மீட்கப்பட்ட சிறார்கள்

## தந்தை கைது!

சிங்கப்பூர் சிற்றி, ஜன. 24

சிங்கப்பூரில் கால்வாயிலிருந்து சடலங்களாக மீட்கப்பட்ட 11 வயது இரட்டையர்களான சிறார்களின் மரணம் தொடர்பில், சந்தேகத்தின்பேரில் அவர்களது 48 வயது தந் தையை பொலிஸார் கைது செய் துள்ளனர்.

நேற்று முன் தினம் சனிக்கிழமை இரவு பொலிஸார் வெளியிட்ட அறிக்கையில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

அப்பர் புக்கிட் தீமா பகுதியின் கிரீன்ரிட்ஜ் கிரசெண்ட்டில் உள்ள விளையாட்டு இடத்தில் உதவி கோரி அந்த தந்தை கடந்த வெள்ளிக்கிழமை மாலை 6.25 மணியளவில் பொலிஸாரை அழைத்திருந்தார்.

தகவலறிந்து சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார், அந்த விளையாட்டு இடம் அருகே உள்ள கால்வாயில் 11 வயது இரட்டைச் சகோதரர்கள் அசைவின்றி கிடந்ததைக் கண்டறிந்தனர். அவ்விருவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்து விட்டதை மருத்துவ உதவியாளர்கள் உறுதி செய்தனர்.

தனக்குக் கிடைத்த முக்கியத் தகவல்களைக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் முடிவில் தந்தை கைதானாதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இன்று திங்கட்கிழமை அவர் மீது நீதிமன்றத்தில் கொலைக் குற்றச்சாட்டு சுமத்தப்படும் என்று பொலிஸ் தெரிவித்தது. (அ)



# மேற்கிந்திய தீவுகள் அணியிடம் மண்டியிட்டது இங்கிலாந்து

இங்கிலாந்து அணிக்கு எதிரான முதலாவது இருபதுக்கு இருபது போட்டியில் மேற்கிந்திய தீவுகள் அணி 9 விக்கெட்களால் வெற்றி பெற்றுள்ளது.

5 இருபதுக்கு இருபது போட்டிகள் மற்றும் 3 டெஸ்ட் போட்டிகளில் விளையாடுவதற்காக இங்கிலாந்து அணி மேற்கிந்திய தீவுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளது.

இந்நிலையில் இரு அணிகளுக்கு இடையிலான முதலாவது போட்டி நேற்று முன்தினம் கென்சிங்டன் ஓவல் மைதானத்தில் இடம்பெற்றது.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்திய தீவுகள் அணி களத்தடுப்பை தெரிவு செய்ய, இங்கிலாந்து அணி முதலில் களமிறங்கியது.

எதிரணியின் பந்துவீச்சை எதிர்கொள்ளமுடியாமல் அடுத்தடுத்து விக்கெட்களை இழந்த இங்கிலாந்து அணியால் 19.4 ஓவர்களில் 103 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக்கொள்ள முடிந்தது.

அந்த ணி சார்பாக துடுப்பாட்டத்தில் கிறிஸ் ஜோர்டான் அதிகபட்சமாக 28 ஓட்டங்களை பெற்றுக்கொடுக்க பந்துவீச்சில் ஹோல்டர் 4 விக்கெட்களை வீழ்த்தினார்.

இதனை அடுத்து 104 என்ற வெற்றி இலக்கோடு பதிலளித்துஆடிய மேற்கிந்திய தீவுகள் அணி 17.1 ஓவர்கள் நிறைவில் ஒரு விக்கெட்டை மாத்திரமே இழந்து வெற்றி இலக்கை கடந்தது.

ஷாய் ஹோப் 20 ஓட்டங்களை பெற்று ஆட்டமிழக்க பிராண்டன் கிங் 52 ஓட்டங்களையும் நிக்கோலஸ் பூரன் 27 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் பெற்றுக்கொண்டனர்.

# குளிர்கால ஒலிம்பிக் போட்டி அடுத்த மாதம் 20 இலட்சம் பேருக்கு கோவிட் பரிசோதனை




குளிர்கால ஒலிம்பிக் போட்டிகள் அடுத்த மாதம் 4 ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ள நிலையில், போட்டிகள் நடைபெறும் பிரதேசத்தை அண்டியுள்ள 20 இலட்சம் மக்களுக்கு கொரோனா பரிசோதனை நடத்தப்பட உள்ளதாக பீஜிங் நகர அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

சில போட்டியாளர்கள், சர்வதேச குழுவினர் மற்றும் ஊடகவியலாளர் என பல தரப்பிருனம் ஏற்கனவே அங்கு செல்ல ஆரம்பித்துள்ளனர். தலைநகர் பீஜிங்கில் கடந்த வாரத்தில் 34 கோவிட் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட் டுள்ளனர்.

இந்நிலையில், போட்டி நடைபெறவுள்ள பிரதேசத்தைச் சூழவுள்ள பிரதேசங்களில் சிறிய அளவில் கொரோனா வைரஸ் தொற்று அடையாளம் காணப்பட் டதனை அடுத்தே கோவிட் பரிசோதனைகள் மேற்கொள்ள திட்டமிடப் பட்டுள்ளது.

அண்மையில் பீஜிங்கில் ஏற்பட்ட தொற்று, வெளிநாட்டு தபால் பொதிகள் ஊடாக பரவியுள்ளதாக தெரியவந்ததை அடுத்து, பொதிகளை பெறும் முன்னர் தொற்று நீக்கம் செய்யுமாறு அஞ்சல் ஊழியர்கள் பணிக்கப்பட்டுள்ளனர்.






# ஐ.பி.எல். ஏலம் அடுத்த மாதம்

2022 ஆம் ஆண்டுக்கான இந்தியன் பிரீமியர் லீக் தொடர் எதிர்வரும் மார்ச் மாதம் 27 ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் என எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

ஐ.பி.எல் தொடரில் பங்கேற்கும் அணிகளுக்கு இடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் இடம்பெற்ற நிலையில், தொடரை மார்ச் மாதத்தில் நடத்துவது குறித்து அவதானம் செலுத்தப் பட்டுள்ளது.

இந்த தொடரை இந்தியாவில் நடத்துவதானால் மும்பை நகரத்துக்கு முன்னுரிமை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதோடு, இரண்டாவதாக அஹமதாபாத் நகரும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

மார்ச் மாதத்துக்குள் கொரோனா கட்டுப்பாட்டுக்குள் வராவிட்டால் தென்னாபிரிக்கா அல்லது ஐக்கிய அரபு இராச்சியத்தில், போட்டியை நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இருப்பினும் ஐ.பி.எல். போட்டிகள் தொடர்பிலான இறுதி தீர்மானம் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 20 ஆம் திகதி எடுக்கப்படவுள்ளது.

இதேவேளை, இந்த வருடத்திற்கான ஐ.பி.எல் தொடரில் பங்கேற்கும் வீரர்களுக்கான ஏலம், எதிர்வரும் பெப்ரவரி மாதம் 12 ஆம் மற்றும் 13 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளது.



# இலங்கை அணி காலிறுதிக்கு தகுதி

19 வயதுக்குட்பட்டோருக்கான உலகக் கிண்ண தொடரில் மேற்கிந்திய தீவுகள் அணியை தோற்றகடித்து இலங்கை அணி கால் இறுதி போட்டிக்கு முன்னே றியது.

மேற்கிந்திய தீவுகள் அணி 50 ஆவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 250 ஓட்டங்களை பெற்றது. இலங்கை அணி 48.2 ஓவர்கள் நிறைவில் 251 ஓட்டங்களை பெற்று வெற்றியை தனதாக்கியது.

# கோவிட் தொற்றுக்கு மத்தியில் பஸ்களில் அதிகளவு பயணிகள்!

## முறையிடும் இலக்கங்கள் அறிவிப்பு

**கொழும்பு, ஜன. 24**

**கடுமையான கோவிட் கட்டுப்பாடுகள் இருந்த போதிலும், பொது மற்றும் தனியார் பஸ்கள், பயணிகளின் இருக்கைக்கு அதிகமாக பயணிகளை ஏற்றிச் செல்வது நாட்டின் அனைத்து பகுதிகளிலும் இடம்பெற்று வருகிறது.**

இது தொடர்பில் பயணிகள் முறைப்பாடுகளை முன்வைக்கின்றனர்.

பஸ்களில் பயணிக்கும் போது தாம் கோவிட் தொற்று அச்சத்தை எதிர்நோக்குவதாக அவர்கள் குறிப்பிட்டனர்.

இதன்போது சுகாதார அதிகாரிகள், சோதனை நடவடிக்கைகளில் ஈடுபடாமை குறித்தும் பொது மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

எனினும் எரிபொருட்களின் விலையுயர்வை அடுத்து நிதிக் காரணங்களுக்காகவே தாம் அதிக பயணிகளை ஏற்றிச் செல்வதாக பஸ்களின் நடத்துநர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இந்தநிலையில் கடந்த நவம்பரில் எரிபொருள் விலை உயர்வை தொடர்ந்து அனைத்து பஸ் கட்டணங்களும் 20 வீதம் அதிகரிக்கப் பட்டன.

எனவே பஸ்களின் வருமானங்கள் நியாயமானதாகவே உள்ளது.

இதன் காரணமாக பஸ்களில் ஆசனங்களுக்கு அதிகமாக பயணிகளை ஏற்றிச் செல்வதற்கு எந்த காரணமும் இல்லை என்று தேசிய போக்குவரத்து ஆணைக் குழுவின் தலைவர் ஷஷி வெல்கம பதிலளித்தார்.

கோவிட் வைரஸ் வழிகாட்டுதலின் கீழ், பஸ் நடத்துநர்கள் இருக்கைகளின் எண்ணிக்கைக்கு மேல் பயணிகளை ஏற்றிச் செல்வது தடை செய்யப்பட்டுள்ளது என்று அவர் மீண்டும் வலியுறுத்தினார்.

ஆசனங்களுக்கு அதிகமாக பயணிகள் ஏற்றிச்செல்லப்பட்டால், 1995 என்ற எண்ணும் தொடர்பு கொண்டு முறையிடலாம் என்றும் ஆணைக்குழுவின் தலைவர் குறிப்பிட்டார். (அ)



# வவுனியாவில் சில இடங்களில் டெங்கு பரவும் அபாய நிலைமை

வவுனியா, ஜன. 24

டெங்கு அபாயத்தை அடுத்து வவுனியா நகரசபைக் குட்பட்ட பகுதிகளில் சுகாதார பிரிவினரினால் டெங்கு பரவும் இடங்கள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதுடன்,

டெங்கு பரவும் அபாயம் காணப்பட்ட இடங்களுக்கு சிவப்பு எச்சரிக்கையும் வழங்கப்பட்டது.

வவுனியாவில் கடந்த இரு மாதங்களில் 20 பேர் டெங்கு நோயாளர்களாக இனங் காணப்பட்டுள்ள நிலையில் அதனைக் கட்டுப்படுத்த விசேட நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அதன் ஒரு கட்டமாக வவுனியா, இறம்பைக்குளம் கிராம அலுவலர் பிரிவு பொதுச் சுகாதார பரிசோதகர் தலைமையில் நகரின் சகாயா மாதா புரம், சூசைப்பிள்ளையார்குளம் ஆகிய பகுதிகளில் டெங்கு நோயை கட்டுப்படுத்தும் விதமாக விசேட சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப் பட்டது.

அப்பகுதியிலுள்ள வீடுகள், வர்த்தக நிலையங்களின் திண்மக்கழிவுகள் நகரசபை வாகனத்தில் ஏற்றப்பட்டதுடன் நுளம்பு குடம்பிகள் பெருகும் நிலையில் காணப்பட்ட இடங்களுக்கு எச்சரிக்கை நோட்டீஸ்களும் வழங்கப்பட்டன.

இவ் நடவடிக்கையில் பொலிஸ் உத்தியோகத்தர்கள், சுகாதார ஊழியர்கள், நகரசபை சுகாதார ஊழியர்கள் ஆகியோரின் பங்குபற்றுதலுடன் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# 'பண்டோரா பேப்பர்ஸ்' விசாரணை; ரஞ்சனிடம் வாக்குமூலம் பெற முடிவு

கொழும்பு, ஜன. 24

'பண்டோரா பேப்பர்ஸ்' தொடர்பில் இடம்பெறும் விசாரணைகளுக்காக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவிடம் வாக்குமூலம் பெறுவதற்கு இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

ரஞ்சன் ராமநாயக்கவின் கோரிக்கைக்கு அமையவே இந்த வாக்குமூலம் பெறப்படவுள்ளதாக ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

சட்டத்தரணியூடாக சத்தியக்கடதாசி மூலம் வாக்குமூலம் வழங்குமாறு அவருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

'பண்டோரா பேப்பர்ஸ்' தொடர்பிலான விசாரணைகளுக்காக நிருபமா ராஜபக்ஷ மற்றும் திருக்குமார் நடேசன் ஆகியோரிடம் மாத்திரமே வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது.

இந்த விசாரணைகளுக்காக உள்நாட்டு வணிக வங்கிகள், அரச வங்கிகள் மற்றும் வரி வருமான திணைக்களத்திடம் ஆவணங்கள் கோரப்பட்டுள்ளன.

சர்வதேச அரசியல் தலைவர்கள் மற்றும் கோடீஸ்வரர்களின் இரகசிய கொடுக்கல், வாங்கல் அடங்கிய பட்டியலில் இலங்கையின் முன்னாள் அமைச்சரான நிருபமா ராஜபக்ஷ மற்றும் அவரது கணவரான வர்த்தகர் திருக்குமார் நடேசன் ஆகியோரது பெயர்களும் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# புதிய அரசியல் கட்சிகளுக்கான பதிவுக்கு விண்ணப்பிக்கலாம்

கொழும்பு, ஜன. 24

புதிய அரசியல் கட்சிகளைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் நடவடிக்கைகள் இன்று முதல் ஆரம்பிக்கப்படும் என தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் இன்று வெளியிடப்படும் என ஆணைக் குழுவின் தலைவர், சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா குறிப்பிட்டார்.

நாட்டில் தற்போது வரை அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளின் எண்ணிக்கை 79 ஆகும்.

அவற்றுள் சட்டச் சிக்கல்களை கொண்ட சுமார் 6 பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகள் மாத்திரம் செயலற்ற அரசியல் கட்சிகளாக கருதப்படுவதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்தார்.

கடந்த ஆண்டு அரசியல் கட்சிகளாக பதிவு செய்வதற்காக சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களில் 03 அரசியல் கட்சிகளை பதிவு செய்வதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு அண்மையில் தீர்மானித்தது. (அ)

# 49 இலட்சத்துக்கும் மேற்பட்டோருக்கு பூஸ்டர் தடுப்பூசி

கொழும்பு, ஜன. 24

நாட்டில் தடுப்பூசியின் மூன்றாவது டோஸாக பைஸர் தடுப்பூசியைப் பெற்றுக்கொண்டவர்களின் எண்ணிக்கை, 49 இலட்சத்தைக் கடந்துள்ளது.

நேற்று முன்தினம் மாத்திரம் நாட்டில் 27 ஆயிரத்து 919 பேருக்கு பூஸ்டர் தடுப்பூசி செலுத்தப்பட்டதாக தொற்று நோய் விஞ்ஞானப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதனையடுத்து, நாட்டில் தடுப்பூசி செலுத்தப்பட்டவர்களின் எண்ணிக்கை 49 இலட்சத்து 16 ஆயிரத்து 430 ஆக அதிகரித்துள்ளது.

அதேநேரம் 12 ஆயிரத்து 571 பேருக்கு பைஸர் தடுப்பூசியின் முதலாவது டோஸும் 221 பேருக்கு தடுப்பூசியின் இரண்டாவது டோஸும் செலுத்தப்பட்டுள்ளது.

அதேபோல நேற்று 792 பேருக்கு சினோபாம் தடுப்பூசியின் முதலாவது டோஸ்/ம் ஆயிரத்து 795 பேருக்கு தடுப்பூசியின் இரண்டாவது டோஸும் செலுத்தப்பட்டுள்ளது. (அ)

# கம்பஹாவில் படிப்படியாக தலை தூக்குகின்றது ஆபத்து

கொழும்பு, ஜன. 24

கம்பஹா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கொரோனா வைரஸ் மீண்டும் வேகமாக பரவி வருவதாக சுகாதார வைத்திய அதிகாரி சுபாஷ் சுபாசிங்க தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில், 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும் 20 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும் பைசர் தடுப்பூசியை வழங்குவதற்காக 70 தடுப்பூசி மையங்கள் உருவாக்கப்பட்டிருந்தன.

எனினும் குறித்த பகுதியில் தடுப்பூசி செலுத்துதலில் மக்களின் ஆர்வம் மிகவும் குறைவாக இருந்ததாக அவர் கூறினார்.

மேலும், 70 நபர்களிடம் முன்னெடுக்கப்பட்ட அன்ரிஜென் பரிசோதனையில் 27 பேருக்கு தொற்று இருப்பது கண்டறியப்பட்டது.

ஏற்கனவே இரண்டு டோஸ் கொரோனா வைரஸ் தடுப்பூசியைப் பெற்ற அனைவரும், மூன்றாவது தடுப்பூசியை விரைவில் போடவேண்டும், இல்லையெனில் மீண்டும் கொரோனா நோய் பரவும் அபாயம் உள்ளது என சுகாதார வைத்திய அதிகாரி சுபாஷ் சுபசிங்க தெரிவித்தார். (அ)

**மணமகள் தேவை**

ஆண் 31 வயது, யாழ். இந்து வேளாளர், சுதுமலை, சைவபோசனம், உத்தரட்டாதி நட்சத்திரம் B.Sc(special) Computational Physics (Colombo) - ஆசிரியர் (physics & Computer Science) சைவபோசனமுடைய பெண் விரும்பத்தக்கது. ஆனால் கட்டாயமில்லை.

தொலைபேசி - 0762213233

# மேலும் 187 பேர் குணமடைவு

கொழும்பு, ஜன. 24

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து மேலும் 187 பேர் குணமடைந்து நேற்று ஞாயிற்றுக் கிழமை வீடுகளுக்கு திரும்பியுள்ளனர்.

இதனையடுத்து, இதுவரை நாட்டில் கொரோனா தொற்றில் இருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 76 ஆயிரத்து 114 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, நாட்டில் கொரோனா தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை 6 இலட்சத்து ஆயிரத்து 48ஆக அதிகரித்துள்ளது.

மேலும் இலங்கையில் இதுவரை பதிவான மொத்த கொரோனா மரணங்களின் எண்ணிக்கை 15 ஆயிரத்து 284 ஆக பதிவாகியுள்ளது. (அ)

## குமார...

ரொரிண்டனில் உள்ள முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவின் இல் லத்தில் முக்கிய கலந்துரையாடலொன்று நடைபெற்றுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் குமார வெல்கம, சுசில் பிரேமஜயந்த, அர்ஜூன ரணதுங்க, அநுரபிரியதர்சன யாப்பா உள்ளிட்ட மேலும் பலர் பங்கேற்றுள்ளனர்.

இதன்போது, கட்சியின் தலைமைக் காரியாலயம் எதிர்வரும் மார்ச் ஐந்தாம் திகதி பத்தரமுல்லையில் திறக்கப்படுகின்ற நிலையில் அதற்கு அடுத்தபடியாக கட்சியின் பொறுப்புக்களை யாரிடம் ஒப்படைப்பது என்பது பற்றி அக்கட்சியின் போசகராக வகிபாகம் கொள்ளவுள்ள சந்திரிகா பண்டாரநாயக்க தலைமையில் ஆராயப்பட்டுள்ளது.

இதன்போது, அர்ஜூன ரணதுங்கவுக்கு பொருளாளர் அல்லது தேசிய அமைப்பாளர் பதவியை வழங்குமாறும், பொதுச்செயலாளர் பதவியில் சுசிலை அமர்த்துமாறும் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

எனினும், அவர்கள் இருவரும் உடனடியாக அப்பதவிகளைப் பெற்றுக்கொள்வதாக இணக்கம் வெளியிட்டிருக்கவில்லை. இந்த நிலையில் தொடர்ந்தும் பேச்சுக்கள் இடம்பெற்று வருவதாக அறியப்படுகின்றது.

இதேவேளை, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 300 அமைப்பாளர்கள் வரையில் குமார வெல்கமவுடன் இணைவதற்கு எதிர்பார்த்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அது தொடர்பான பேச்சுவார்த்தைகள் நிறைவுக்கு வந்துள்ள நிலையில் அடுத்த கட்டமாக நியமனக் கடிதங்கள் தலைமைக்காரியாலய திறப்பு விழா அன்று வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

மேலும், தமது கட்சியின் அமைப்பாளர்கள் யாரும் குமார வெல்கமவின் கட்சியில் இணைய முயற்சிகளை கொண்டிருக்கவில்லை என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தெரிவித்துள்ளது. (அ)

## புதிய அரசமைப்பு...

ரத்ன தேரர் மற்றும் ஆவண காப்பாளர் மெதகம தம்மானந்த தேரர் ஆகியோரை சந்தித்த பின்னர் கண்டியில் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

புதிய அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்க ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா தலைமையில் நியமிக்கப்பட்டுள்ள குழு அடிப்படை வரைவை ஏற்கனவே உருவாக்கியுள்ளது.

விருப்பு வாக்கு அடிப்படையிலான தேர்தல் முறை மோசடியான நிலைமைக்கு வந்துள்ளதால், தேர்தல் முறையில் மாற்றம் செய்வது புதிய அரசியலமைப்புச் சட்டத்தின் பிரதான இலக்கு.

அமைச்சர் தினேஷ் குணவர்தன தலைமையில் பாராளுமன்ற தெரிவுக் குழுவும் புதிய அரசமைப்புச் சட்டத்தை உருவாக்க நியமிக்கப்பட்டுள்ளது.

அந்த தெரிவுக்குழுவின் அறிக்கை வரைவு யோசனையாக நாடாளுமன்றத்தில் விரைவில் சமர்பிக்கப்படும்-என்றார். (அ)

## தமிழ் கட்சிகள்...

ஆகவே, தமிழர் தரப்பின் பிரச்னைகளைச் செவிமடுத்து அவர்களின் நியாயமான கோரிக்கைகளுக்குத் தீர்வுகளைப் பெற்றுக்கொடுக்க வேண்டிய கட்டாயம் இலங் கை அரசுக்கு உள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

நாட்டின் தற்போதைய அரசியல் முரண்பாடுகள் தொடர்பில் ஊடகங்களிடம் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலைமையில் தமிழர் தரப்பு இந்தியாவுடன் தனிப்பட்ட தொடர்புகளை ஏற்படுத்துவது குறித்து கவனம் செலுத்தப்படுகின்றது.

அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப் படுத்தல் மற்றும் 1987ஆம் ஆண்டு வாக்குறுதிகளை முழுமையாக நடைமுறைப் படுத்த வலியுறுத்தியுள்ளமை வழமை போன்ற செயற்பாடாக இருந்தாலும் இப்போது இதனைச் சாதாரணமாகக் கருத முடியாது.

இன்று சீனா, ஜப்பான் ஒருபக்கம் பலமடைந்து வருகின்ற நிலையில் அமெரிக்க தலைமையில் இந்தியா, ஆஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகளின் கூட்டணி உருவாக்கப்பட்டு வருகின்றது.

இந்தப் போட்டியில் இலங்கை சிக்கிக் கொண்டுள்ளது. இதில் தமிழர் தரப்பின் நகர்வுகள் அவதானிக்கப்படவேண்டிய ஒன்றாகும்.

வெவ்வேறு நாடுகளுடன் நாம் பகுதி பகுதியாக இணைய நினைப்பது ஆரோக்கியமான விடயம் அல்ல.

நாடாக ஒரே கொள்கையில் பயணிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. அதற்காக முதலில் தேசிய மட்டத்தில் சகல தரப்பையும் ஒன்றிணைத்துப் பேச்சுகளை முன்னெடுக்க வேண்டும்.

தமிழர் தரப்பின் பிரச்னைகளைச் செவிமடுத்து அவர்களின் நியாயமான கோரிக்கைகளுக்குத் தீர்வுகளைப் பெற்றுக்கொடுக்க வேண்டும்.

இனியும் தவறான கொள்கையில் அரசு பயணித்தால் ஒட்டுமொத்த நாடுமே பாதாளத்தில் விழும்-என்றார். (அ)

## யாழ்ப்பாணத்தை...

மேலும், யாழ் மாவட்ட சுகாதார மேம்பாட்டு கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. இதன்போது கொரோனா, டெங்கு, மலேரியா போன்ற தொற்று நோய் பரவலை தடுப்பது பற்றியும் ஆராயப்பட்டது.

யாழ். மாவட்டத்தில் இதுவரை 19 ஆயிரத்து 62 பேர் கொரோனா தொற்றுக்கு இலக்காகினர். தொற்று பரவலால் 502 இறப்புக்களும் பதிவு செய்யப்பட்டன. தற்போது 35 குடும்பங்கள் சுய தனிமைப்படுத்தலில் உள்ளனர்.

தடுப்பூசியை பொறுத்தவரை 30 வயதுக்கு மேல் 3 இலட்சத்து 9 ஆயிரத்து 839 பேரும் 29 தொடக்கம் 20 வயதுடையவர்களில் 56 ஆயிரம் பேரும் 12 தொடக்கம் 19 வயதுடையவர்களில் 57 அயிரத்து 265 பேரும் முதலாவது டோஸை பெற்றுள்ளனர்.

பூஸ்டர் தடுப்பூசியை 88 ஆயிரத்து 800 பேர் பெற்றுள்ளனர். முதலாம், இரண்டாம் தடுப்பூசியைப் பெற்றுக் கொண்டவர்கள், பூஸ்டர் தடுப்பூசியை கட்டாயம் பெற்றுக்கொள்ள வேண்டும். 30 வீதமானவர்களே பூஸ்டர் தடுப்பூசியை இதுவரை பெற்றுள்ளனர்.

ஒமைக்ரோன் திரிபு தற்போது பரவி வரும் நிலையில் யாழ். மாவட்டத்திலும் அது பரவுவதற்கான ஏதுநிலைகள் காணப்படுகின்றன. இந்த சூழ்நிலையில் பூஸ்டர் தடுப்பூசியை பெற்றுக் கொள்வது அவசியம். இதற்கமைய, எதிர்வரும் 31 ஆம் திகதி முதல், பூஸ்டர் தடுப்பூசி வாரம் பிரகடனப்படுத்தவுள்ளோம்.

பாடசாலை போக்குவரத்து உட்பட அனைத்து செயற்பாடுகளும் வழமைக்குத் திரும்பியுள்ள நிலையில் பூஸ்டர் தடுப்பூசி பெற்றுக் கொள்ளாதவிடத்து மீண்டும் ஒரு முடக்க நிலையை நோக்கிச் செல்ல வேண்டிய அபாயம் ஏற்படும் - என்றார்.

## எரிபொருள்...

கரித்துள்ளது.

தேசிய மின் கட்டமைப்பிற்கு சுமார் 108 மெகாவாட் மின்சாரத்தை சேர்க்கும் சப்புகஸ்கந்த அனல்மின் நிலையம், அதன் இயக்கத்துக்கு தேவையான உலை எண்ணெய் இல்லாததால் முற்றாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், நுரைச்சோலை நிலக்கரி அனல்மின் நிலையத்தின் ஊடாக இழந்த மின்சாரத் திறன் எதிர்வரும் 26ஆம் திகதிக்குள் மீளமைக்கப்படும் என இலங்கை மின்சார சபை நம்பிக்கை தெரிவித்துள்ளது. (அ)

# இன, மத, சாதி பேதமின்றி சகலருக்கும் சமமான சட்டத்தை அமுல்படுத்துங்கள்!

## பரடுவ ஜினரத்ன தேரர் வலியுறுத்து



கொழும்பு, ஜன. 24

இனம், மதம், சாதி அடிப்படையில் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் ஏற்றத்தாழ்வுகள் காணப்படுவதாக உதாரணங்களுடன் சுட்டிக்காட்டிய மாத்தறை மாவட்ட சாசனாரக்ஷக சபையின் பதிவாளர் வண. பரடுவ ஜினரத்ன தேரர், அவ்வாறில்லாமல் அனைவரையும் சமமாக நடத்தும் சட்டம் இயற்றப்பட வேண்டும் என வலியுறுத்தினார்.

'ஒரே நாடு ஒரே சட்டம்' தொடர்பான ஜனாதிபதி செயலணி, தென் மாகாண மக்களின் கருத்துக்களை கேட்டறியும் நிகழ்வு, நேற்றுமுன்தினம் திக்வெல்ல பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றதோடு, அதில் கலந்துகொண்டு கருத்துரைத்தபோதே தேரர் இவ்வாறு தெரிவித்தார்.

மதத் தலைவர்கள் மற்றும் தோட்டத் தொழிலாளர்கள், செயலணியிடம் தங்கள் ஆலோசனைகளை முன்வைத்ததோடு, சிலர் எழுத்து மூலமும் முன்மொழிவுகளை சமர்ப்பித்தனர்.

பண்டைய காலத்தில் ஒரே சட்டம் அமுல்படுத்தப்பட்ட நாடாக இலங்கை இருந்தது. பல்வேறு படையெடுப்புகளால் அது மாறியது. இந்நிலையை மாற்றி, ஒரு நாட்டில் ஒரு சட்டத்தை நடைமுறைப்படுத்த ஜனாதிபதி மேற்கொண்டுள்ள முயற்சிகளை வண. ஜினரத்ன தேரர் பாராட்டினார் என்றும் ஜனாதிபதி ஊடகப் பிரிவு நேற்று வெளியிட்ட ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளது. (ஐ)

## 105 இந்தியப்...

(5), கிரஞ்சி (24), தலைமன்னார் (9), கல்பிட்டி (2) ஆகிய இடங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இழுவை படகுகள் முறையே பெப்ரவரி 7, 8, 9 மற்றும் 10 ஆம் திகதிகளில் ஏலம் விடப்படவுள்ளன.

இந்தப் படகுகள் பகுதியளவில் சேதமடைந்தும் அல்லது பயன்படுத்துவதற்கு ஏற்ற நிலையில் இல்லாத காரணத்தினாலும் அவற்றை ஏலம் விடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கடற்றொழில் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் எஸ்.ஜே. கஹவத்த தெரிவித்தார்.

"அதுமட்டுமல்லாமல், இந்த இழுவை படகுகள் பல ஆண்டுகளாக கடற்படை துறைமுகங்களில் நங்கூரமிடப்பட்டு டெங்கு நுளம்பு இனப்பெருக்கம் செய்யும் இடங்களாக மாறிவிட்டன. நீதிமன்ற நடவடிக்கைகள் நீண்ட காலத்திற்கு முன்பே முடிவடைந்ததால், அவற்றை அப்புறப்படுத்த வேண்டும்" எனக் கூறினார்.

கைப்பற்றப்பட்ட இழுவை படகுகளை அடுத்த மாதம் பொது ஏலத்தில் விடுவதற்கு முன்னதாக கடல் பொறியியலாளர்களின் உதவியுடன் மதிப்பிடும் பணியை சம்பந்தப்பட்ட மாவட்ட கடற்றொழில் திணைக்களங்கள் ஏற்கனவே ஆரம்பித்துள்ளன.

கடற்றொழில் திணைக்களம் வெளியிட்டுள்ள பொது அறிவிப்பின்படி, ஏலவளாகத்திற்குள் நுழைபவர் ரூ. 1000 செலுத்த வேண்டும். ஜனவரி 31 முதல் பெப்ரவரி 5 வரை அந்த இடத்தில் பொருட்களை ஆய்வு செய்ய அனுமதிக்கப்படுவார்கள். வாங்குபவர்கள் கடற்படையின் முன் அனுமதியைப் பெறுவதற்கான கோரிக்கையை மாவட்ட மீன்பிடி உதவி இயக்குநரிடம் சமர்ப்பிக்க வேண்டும். வாங்குபவர் ஏலத்தின் முடிவில் மொத்தத் தொகையில் இருபது சதவீதத்தை செலுத்த வேண்டும், மீதமுள்ள தொகையை ஐந்து வேலை நாட்களுக்குள் செலுத்த வேண்டும் - என்றும் தெரிவிக்கபப்பட்டது. (ஐ)

## மின்சார...

கருத்து வெளியிடும்போதே முன்னாள் ஜனாதிபதி இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மின்சார துறையின் தொழிற்நுட்பப் பிரிவுகளில் பல ஆண்டுகளாக பல்வேறு பிரச்னைகள் உள்ளன. இந்த பிரச்னைகளை தீர்க்க முடியாத துரதிஷ்டம் காரணமாகவே மக்கள் இருளில் இருக்க நேரிட்டுள்ளது.

மின்சார நெருக்கடி இல்லாத காலத்தில் தனியார் துறையினரிடம் இருந்து மின்சாரத்தை பெற பில்லியன் கணக்கில் பணம் செலவிடப்படுவது நாட்டு மக்களுக்கு தெரியாது.

நீண்டகாலமாக தனியார் துறையினரிடம் இருந்து மின்சாரத்தை பெற பெருந்தொகையான பணம் செலவிடப்பட்டு வருகிறது.

இருந்து வந்த பிரச்னைகள் ஒன்றாக சேர்ந்து மோசமான நிலைமைக்கு வந்துள்ளது.

எரிபொருள் நெருக்கடி, நிலக்கரி பிரச்னை, பொருளாதார நெருக்கடியுடன் இந்த நிலைமை உருவாகியுள்ளது.

தொழிற்நுட்ப மற்றும் அரசியல் தரப்பினர் இது சம்பந்தமாக பேச்சுவார்த்தை நடத்தி, பிரச்னையை முடிவுக்கு கொண்டு வந்து மக்களுக்கு தேவையான நிவாரணங்கள் மற்றும் நலன்புரி சேவைகளை வழங்குவது முக்கியமானது-என்றார். (அ)

## நாட்டின்...

தித்தார்.

இந்த யோசனை அதிகார சபைக் கூட்டத்தில் முன்வைக்கப்பட்டபோது, அனைவரும் அதற்கு ஆதரவாக வாக்களித்துள்ளதுடன் யோசனை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

## கைதி உயிரிழப்பு...

காவலர் மற்றும் கட்டுப்பாட்டு பிரிவு சிறைக்காவலர் ஆகியோரே பணியிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்தார்.

கைதி உயிரிழந்த சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அவர் மேலும் கூறினார்.

## கொழும்பு...

கொழும்பு துறைமுக நகரின் அழகுக்கு அங்கு தென்னைகள் நாட்டப்பட்டுள்ளன. அத்துடன் பனை மரங்களும் வரிசைக்கு நாட்டும் செயற்றிட்டம் இடம்பெறுகின்றது.

இந்தத் திட்டம் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பல்துறை ஆராய்ச்சியாளரும் ஆரம்பகால புத்தாக்குநருமான சகாதேவனால் செயற்படுத்தப்பட்டுள்ளது.

இந்த திட்டத்துக்கு பெருந்தோட்ட இராஜாங்க அமைச்சர் அருந்திக்க பெர்னாண்டோ, பனை அபிவிருத்திச் சபை தலைவர் கிருஸ்ணாநந்த பத்திராஜா, பனை ஆராய்ச்சி நிலையத்தின் பிரதி பொதுமுகாமையாளர் ஸ்ரீ வயிந்திரன் ஆகியோர் ஒத்துழைப்பை வழங்கியிருந்தனர். (அ)

ஈழநாடு
Eelanadu

# வடக்கு - கிழக்குத் தலைமைகள் பொறுப்புடன் நடக்கவேண்டும்!

## பஸில் ராஜபக்ஷ வலியுறுத்தல்



கொழும்பு, ஜன. 24

**'அரசியல் தீர்வு மாத்திரம் தமிழ் மக்களின் பிரச்னைகள் அல்ல. அதை விட அவர்களின் அத்தியாவசிய தேவைகளைத் தீர்ப்பதே முக்கியம். அவற்றைத் தீர்த்து வைப்பது தொடர்பிலேயே முதலில் நாம் கவனம் செலுத் துகின்றோம்.' - இவ்வாறு நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.**

ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்பட தமிழ் கட்சிகள் காரசாரமாக விமர்சித்துள்ளன. இவ்வாறானதொரு நிலையில் கூட்டமைப்புடனான ஜனாதிபதியின் பேச்சு முன்னெடுக்கப்படுமா என்று நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ விடம் எழுப்பிய கேள்விக்கே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

திறந்த மனதுடன் தமிழர் தரப்புடன் பேச்சு நடத்த ஜனாதிபதி தலைமையிலான அரசு தயார் நிலையில் உள்ளது. அந்தப் பேச்சு விரைவில் ஆரம்பிக்கப்படும்.

அரசியல் தீர்வு மாத்திரம் தமிழ் மக்களின் பிரச்சினை அல்ல. அதைவிட அவர்களின் அத்தியாவசிய தேவைகளே முக்கியம். எனவே, முதலில் அத்தியாவசிய தேவைகளுக்கு - அடிப்படைப் பிரச்னைகளுக்குத் தீர்வு காண வேண்டும். இது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்வின் திட்டமாக உள்ளது. இவற்றுக்கு முதலில் தீர்வு கண்டால் அரசியல் பிரச்னைக்கு இலகுவில் தீர்வு காண முடியும்.

வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் பிரதிநிதிகள் மிகவும் பொறுப்புடன் செயற்படவேண்டும். மக்கள் நலன் சார்ந்த செயற்பாடுகளில் அவர்கள் ஈடுபட வேண்டும். நாட்டைப் பிளவுபடுத்தி இனவாத ரீதியில் செயற்பட அவர்கள் முற்படக்கூடாது.

நாட்டை முன்நகர்த்தும் செயற்பாடுகளுக்குத் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் அரசுக்குப் பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும்-என்றார். (அ)

## மரண அறிவித்தல்

மலர்வு 24 - 03 - 1939



உதிர்வு 19 - 01 - 2022

### திருமதி
### மார்க்கண்டு தங்கம்மா

யாழ். அனலைதீவு 3ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், கனடா Brampton, Toronto ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட மார்க்கண்டு தங்கம்மா அவர்கள் 19.01.2022 புதன்கிழமை அன்று கனடாவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அரியபுத்திரன் - விசாலாட்சி தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - மீனாட்சி தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற மார்க்கண்டு அவர்களின் ஆருயிர் மனைவியும், சிவஞானசுந்தரம்(தம்பி), புவனசுந்தரன் (சிவம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும்,ஜனனி, பிரியா ஆகியோரின் அன்பு மாமியாரும்,விசாகன், சங்கவி, பிரணவி, பிரணவன், பிரவீன் ஆகியோரின் பாசமிகு அப்பம்மாவும்,காலஞ்சென்றவர்களான திருநாவுக்கரசு, சண்முகலிங்கம் மற்றும் கண்மணி, புவனேஸ்வரி, விநாயகமூர்த்தி ஆகியோரின் அன்புச் சகோதரியும், பாஸ்கரன்- தங்கம்மா, சிவபாதம்- சரஸ்வதி ஆகியாரேின் சம்பந்தியும், பரமேஸ்வரி, கருணாகரன், சகுந்தலாதேவி, தெய்வானை, காலஞ்சென்ற இலட்சுமி மற்றும் குமாரசாமி, இராமலிங்கம், காலஞ்சென்ற இராசம்மா மற்றும் தங்கம்மா, காலஞ்சென்ற சின்னராசா ஆகியோரின் ஆசை மைத்துனியும் ஆவார்.

*பார்வைக்கு :*
Tuesday, 25 Jan 2022 8:00 AM - 10:30 AM
St John's Dixie Cemetery & Crematorium 737 Dundas St E, Mississauga, ON L4Y 2B5, Canada

*கிரியை:*
Tuesday, 25 Jan 2022 10:30 AM - 12:00 PM
St John's Dixie Cemetery & Crematorium 737 Dundas St E, Mississauga, ON L4Y 2B5, Canada

*தகனம்:*
Tuesday, 25 Jan 2022 12:30 PM
St John's Dixie Cemetery & Crematorium 737 Dundas St E, Mississauga, ON L4Y 2B5, Canada

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
**சிவஞானசுந்தரம்**
**(தம்பி - மகன்)**
**Mobile : +14168363047**

தகவல்:
**குடும்பத்தினர்.**





## உருத்திரபுரீஸ்வரர் ஆலயத்தின் கும்பாபிஷேகம் நடைபெற்றது!

*கிளிநொச்சி, ஜன. 24*

வரலாற்றுத் தொன்மை கொண்ட கிளிநொச்சி - உருத்திரபுரம் உருத்திரபுரீஸ்வரர் சிவாலயத்தின் மகா கும்பாபிஷேக பெருவிழா நேற்று ஞாயிற்றுக்கிழமை நடந்தது.

கடந்த 17ஆம் திகதி திங்கட்கிழமை அதிகாலை 6 மணி முதல் கிரியைகள் ஆரம்பமாகி இடம்பெற்று வந்தன.

சனிக்கிழமை எண்ணெய் காப்பு சாத்தப்பட்டு, நேற்று மகா கும்பாபிஷேக பெருவிழா வெகு சிறப்பாக நடைபெற்றது. இதில் அந்தணர்கள், சமய பெரியார்கள் மற்றும் பெருந்திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

## செல்பி, தனிப்பட்ட படங்களுக்கு துறைமுகநகரில் கட்டணமில்லை!

*கொழும்பு, ஜன. 24*

கொழும்பு துறைமுக நகரில் திறந்துவைக்கப்பட்ட மெரினா நடைபாதையில் 'செல்பி' எடுப்பதற்கும், தனிப்பட்ட காணொலிகளைப் பதிவு செய்வதற்கும் கட்டணம் செலுத்த வேண்டிய அவசியம் இல்லை என கொழும்புத் துறைமுக நகரத் திட்ட நிறுவனம் அறிவித்துள்ளது.

குறித்த பகுதியில், செல்பி படங்களை எடுப்பதற்கும், காணொலிகளை பதிவு செய்வதற்குக் கொழும்புத் துறைமுக நிறுவனம் கட்டணம் அறவிடுவதாக சமூக வலைத் தளங்களில் வெளியாகியுள்ள செய்தி உண்மைக்குப் புறம்பானது என அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும் கொழும்புத் துறைமுக நகர பகுதியில், விழாக்கள் மற்றும் வணிக ரீதியில் பதிவு செய்யப்படும் படங்கள் மற்றும் காணொலிகளுக்குக் கட்டணம் அறவிடப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதற்கமைய, தனிப்பட்ட நிகழ்வுகள், திருமண நிகழ்வுகள், வணிக விளம்பரங்கள் ஆகியவற்றுக்காக எடுக்கப்படும் படங்கள் மற்றும் காணொலிகளுக்கு கட்டணம் அறவிடப்படும் முறைமை குறித்த கட்டணப்பட்டியல் ஒன்றை வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது.

## கடலில் குளிக்கச் சென்ற மூன்று சிறுமிகள் மாயம்

*கொழும்பு, ஜன. 24*

மாத்தறை - வெலிகம பகுதியில் கடலில் நீராடச் சென்ற ஐந்து சிறுமிகளில் மூவர் நேற்று முற்பகல் காணாமல்போயுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏனைய இருவரும் காப்பாற்றப்பட்டு மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று வெலிகம பொலிஸார் அறிவித்துள்ளனர்.

காணாமல்போயுள்ள மூன்று சிறுமிகளையும் தேடும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று வெலிகம பொலிஸார் மேலும் கூறினர்.







இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 24.01.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**


6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய ராசி பலன்
7.05 மணி : உளவியல் கருத்து- உளவளத்துணையாளர் நா.நவராஜ்
7.15 மணி : கதைவழி அறமொழி வழங்குபவர் : பண்டிதர் திருநாவுக்கரசு
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
07.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : கொழும்பு-16-மறு ஒளிபரப்பு
11.30 மணி : மனிதனின் மறுபக்கம்

**பகல்**

12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை நகைச்சுவை நிகழ்ச்சி
1.00 மணி : அறிந்தும் அறியாமலும் (மறு ஒளிபரப்பு)
1.30 மணி : சுப்பர் சீன்ஸ் - அட்டக்கத்தி, அமரகாவியம்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்- சிறுவர்களை மகிழ்வூட்டும் நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : ரெயிலர் டைம்
6.30 மணி : நலந்தானா
7.00 மணி : சொற்சமர் -பாடசாலை மாணவர்களுக்காக விவாத நிகழ்ச்சி




8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சாட்சியம்
9.30 மணி: ஹலோ கோடம்பாக்கம்
10.00 மணி : நேருக்கு நேர்

## DAN COMEDY HD

**காலை**

6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**

1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**

8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**

6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**

12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டூ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**

8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**

5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**

12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**

7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

## ஓம் நிவி

**காலை**

5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**

12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**

7.00 மணி :செய்திகள்
7.30 மணி : அருளுரை

## CHANNEL HOLY MARY

**காலை**

7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (மறுஒலிபரப்பு)
10.00 மணி: அன்னை மரியா
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபங்கேளும் திருகோணமலை (சனி மறு ஒளிபரப்பு)

**பகல்**

12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (திருகோணமலை)
03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம் (மறு ஒளிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : ஞானவழி
07.30 மணி : அன்பியம்

## Pirai Television

**காலை**

6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**

12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**

7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு